பொன்னி பொருளடக்கம்

மலர் 5 | செப்டம்பர் 25, 1951 | இதழ் 14

திருவள்ளுவர் ஆண்டு 1982 புரட்டாசித் திங்கள் 9-ம் நாள்

முன்னேறும் சமூகம்	....	அமைச்சர் காட்கில்	1
அம்பேத்கார் மசோதா	....	தலையங்கம்	3
காலமும் கருத்தும்	....		5
மணமக்கள் வாழ்க	....		7
யாருக்கு உங்கள் வாக்கு?	....	கடிதங்கள்	8
பைத்தியக்காரி	....	வாணிதாசன்	10
பொழுது போக்கு	....	சீகேயார்	14
ராஜா ராணி	....	தங்கமணி	17
தமிழ் விருந்து	....	தமிழ்த்தும்பி	22
ஆடும் மாடும்	....	டி. கே. சீனிவாசன்	27
நமக்குள்ளே	....	சுகி	38
பேய்	....	வேலைவில்லவன்	44
நாக கம்	....	வ சம்பந்தன்	52
பழைய நினைவு	....	சகுணாபாய் மான்சிங்	58

முன்னேறும் சமூகம்

ராமராஜ்யத்தைப்பற்றிக் குறிப்பிட்டுப் பேசுபவர்கள் ராமனுடைய உதாரணத்தை மறக்கலாகாது. அவனைப்போல 'ஏகபத்தினி' விரதனாக இருப்பதற்கல்லவா இம்மசோதா வழிசெய்கிறது! இந்தியாவில் 90 சத விகிதத்தினர் இந்துக்கள். இவர்கள் ஒருதார மணத்தை ஒப்புக்கொண்டால் மற்றவர்களும் அதே முறையைப் பின்பற்றச் செய்வது எளிது. தம்பதிகள் பிரிந்து வாழவும், மணவிலக்குச் செய்யவும் உரிமை அவசியம். மணம் என்பது வாழ்க்கைத் தண்டனையாக மாறிவிடக் கூடாது. மனித சமூகம் முன்னேறிக்கொண்டிருக்கிறது. முன்னோர் சொன்னவை மாற்றக்கூடாதவை என்று நினைப்பது தவறு. அவர்களை விட நாம் மதி நுட்பத்தில் மட்டமானவர்கள் என்று ஏன் நினைக்கவேண்டும்?

[அமைச்சர் காட்கில் அம்பேத்காரின் இந்து சட்டத் தொகுப்பு மசோதாவை ஆதரித்துப் பேசும்போது இவ்வாறு குறிப்பிட்டார்.]

m211, N47P0
N51.5.14
197800

விருந்து இலக்கிய வரிசை

இப்பொழுது எங்கும் விற்பனையாகிறது :

மாமனார் வீடு

ஆலிவர் கோல்டுஸ்மித் வரைந்த ஆங்கில நாடகம்

★

3-வது புத்தகம் அக்டோபர் 15ல் மலருகிறது :

துன்பக்கேணி

யாமதா ககாஷி தீட்டிய ஜப்பானியக் கதை

★

ஒவ்வொன்றும் விலை அணு 8

பொன்னி லிமிடெட் — சென்னை-21

அம்பேத்கார் மசோதா

டில்லி பார்லிமெண்டில் டாக்டர் அம்பேத்காரின் இந்து சட்டத் தொகுப்பு மசோதா விவாதிக்கப்படுகிறது; ஆதரித்தும் எதிர்த்தும் காரசாரமான விவாதங்கள் நடைபெற்ற வண்ணமிருக்கின்றன; பார்லிமெண்ட் நடைமுறை தவிர்த்து இந்தியா முழுவதும் இம் மசோதா பெரிய பிரச்னையாகப் பேசப்பட்டு வருகிறது.

சட்ட நிபுணர்களும், இந்துமத பரிபாலகர்களும் மசோதாவை எதிர்த்து அறிக்கைகள் வெளியிட்டிருக்கின்றனர். முற்போக்காளர்களும் பெண்கள் சங்கங்களும் இம்மசோதாவை ஆதரித்துப் பிரசாரம் செய்துவருகின்றனர். இந்நிலையில் ஏறக்குறைய இரண்டாண்டுகளுக்கு மேல் இம்மசோதா பார்லிமெண்டின் பரிசீலனையிலேயே இருந்துவந்திருக்கிறது. அப்படியிருந்தும் மசோதாவின் ஒரு பகுதி மட்டும்தான் இப்பொழுது நிறைவேறப்போகிறது. மற்ற பகுதிகளைப் புதுப் பார்லிமெண்டு நிறைவேற்றுமாம்!

இம்மசோதாவின் சரித்திரம் வேடிக்கையானது. டாக்டர் அம்பேத்கார் சமூக சீர்திருத்தவாதி, முற்போக்கு எண்ணங் கொண்டவர் என்ற கருத்தில் யாருக்கும் மாறுபாடு இருக்கமுடியாது. அவர் தயாரித்த மசோதா என்ற முறையில் சீர்திருத்தம் பரிபூரணமாக இருக்கும் என்று எதிர்பார்க்கப்படுவது இயற்கை. அசல் மசோதா இந்து சட்டங்களைப் புதுக் கண்ணோட்டப்படி மாற்றியமைப்பதாகவே இருந்தது. ஆனால் பார்லிமெண்ட் மெம்பர்கள் போக்கும் நேரு சர்க்காரில் இடம்பெற்றுள்ள பெரிய மனிதர்களின் எதிர்ப்பு மனப்பான்மையும் மசோதாவை உப்பு சப்பில்லாமல் ஆக்கிவிட்டன. காங்கிரஸ் கட்சியைச்சேர்ந்த உறுப்பினர்களே இம் மசோதா சரிவர நிறைவேறாதபடி தடுத்து வந்திருக்கின்றனர். எதிப்பாளர்கள் இம்மசோதா நிறைவேறக்கூடாது; தடுத்துவிட வேண்டும் என்று எண்ணியபடியே மசோதா பரிசீலனை நீடித்துக் கொண்டே சென்றது. நேரு 'இம்மசோதா நிறைவேறாவிட்டால் என் மீது நம்பிக்கையில்லை என்று பொருள்' என்று ஒரே பிடியாய் நின்றும் மசோதா நிலை வழவழவென்று தளர்ந்துவிட்டது. காரணம் நேருவைத் தலைவாகக் கொண்ட காங்கிரஸ்காரர்கள் எக்காரணத்தாலோ பிடிக்காமல் போனதுதான்!

இப்போது அவசர கோலத்தில் மசோதா அரைகுறையாக நிறைவேறப் போகிறது. இந்த அரைகுறை மசோதா என்ன சீர்திருத்தங்களை வழங்குகிறது? இதனில், ஒன்றும் சென்னை

தமிழ்நாடு ஆவணக் காப்பக நூலகம்
19780

மாகாணத்தைப் பொறுத்த வரையில் புதுமையில்லை என்றே கூற வேண்டியிருக்கிறது. இருதாரத் தடையும், மண விலக்கு அனுமதியுமே அம்பேத்கார் நிறைவேற்றப் போகும் மசோதாவின் நோக்கமாகும். ஏற்கனவே இச் சீர்திருத்தங்களைச் சென்னை ஆமுலுக்கு கொண்டு வந்துவிட்டது. எனவே டில்லி பார்லிமெண்டில் அமர்க்களப்படும் இந்து சட்ட மசோதா நம்மைப் பொறுத்த வரையில் பழைய விவகாரந்தான்!

பெண்களுக்குச் சொத்துரிமை வழங்கும் மற்ற பகுதிகள் இப்போது நிறைவேறப் போவதில்லை; தேர்தல் முடிந்து புதுப் பார்லிமெண்டு கூடும்போது, அவை பரிசிலனைக்கு வரலாம்; அல்லது வராமலும் போகலாம். இத்தனை ஆர்ப்பாட்டத்தோடு பேசப்பட்ட மசோதாவின் கதை கழுதை தேய்ந்து கட்டெறும்பான கதையையே நினைவுபடுத்துகிறது. சிறு சீர்திருத்தங்களுக்குக் கூட ஆட்சியிலிருப்பவர்களும் அவர்களைத் தாங்கி நிற்பவர்களும் இடம் தர மறுக்கிறார்களென்பது இம் மசோதா மூலம் வெளிப்படையாகத் தெரிகிறது. நேரு, மசோதா நிறைவேற வேண்டுமென்று விரும்புகிறார். அவர் காங்கிரஸ் கட்சியின் ஈடு இணையற்ற தலைவர்—அவர் கோரிக்கை நிறைவேறவில்லை என்றால் பிற்போக்கு எண்ணங்கொண்டோர் பெரும்பான்மையினராக அவரைச் சூழ்ந்திருக்கிறார்கள் என்றுதான் பொருள். இல்லாவிட்டால் இத்தனை சாதாரண மாறுதல்களுக்கு இவ்வளவு எதிர்ப்பும் ஒத்திவைப்பும் அவசியமே இல்லை. 'இந்து மகாசனப்' மனப்பான்மை காங்கிரஸ்காரர்களிடமும் வேரூன்றியிருக்கிறது என்பதற்கு இந்து சட்ட மசோதா சீரழிந்ததே சரியான சான்றாகும்.

ஆனால் சீர்திருத்தங்களைத் தடுத்து நிறுத்தலாம் என்று கனவு காண்போர், அம்பேத்காரின் தோல்வியைக்கண்டு பூரிப்படைந்தால் அவர்கள் ஏமாறத்தான் போகிறார்கள் என்று திண்ணமாகக் கூறலாம். இம்மசோதா சீர்திருத்தத்தின் வாசற்படி என்று கூறலாமேயொழிய முழுமையான சீர்திருத்தம் இந்த ஆட்சியாளர்களின் கற்பனையில் கூட அடங்கியிருக்கவில்லை. முழுமையான சீர்திருத்தம் பாழடைந்துவரும் சமுதாயத்துக்குத் தேவை. அந்தத் தேவையை உணராமல் சமுதாயத்தைப் பாழடைய விடுபவர்கள் சமூக துரோகிகள்! அவர்கள் கை இப்போது ஓங்கியிருக்கலாம். ஆனால் வரப்போகும் எதிர்காலத்தில், இந்தப் பழமை விரும்பிகளுக்கு, பத்தாம் பசலிகளுக்கு இடமே இல்லை! முற்றிலும் அறிவு மணம் கமழும் புதுச் சமுதாயம் உருவாகி வருகிறது என்பதை அவர்கள் உணரவேண்டும். அந்த உணர்வை அம்பேத்காரின் மசோதா வளர்க்குமென்பதில் ஐயமில்லை.

காலமும் கருத்தும்

பத்திரிகைச் சட்டம்

உள்நாட்டு அமைச்சர் ஆச்சாரியார் பத்திரிகைச் சட்டமொன்று கொண்டுவந்திருக்கிறார். அது பார்லிமெண்டில் விவாதிக்கப்பட்டுத் தனிக்கமிட்டியின் பரிசீலனைக்கு அனுப்பப்பட்டிருக்கிறது. இம் மசோதா அவசர அவசரமாக நிறைவேற்றப்படப்போகிறது. இத்தனை அவசரமென்ன என்று ஆராயும்போதுதான் வரப்போகும் தேர்தல் நம் கண்முன் வருகிறது. தேர்தலுக்கான பல முன்னேற்பாடுகளில் இதுவும் ஒன்று என்ற முடிவுக்குத்தான் நாம் வரவேண்டியிருக்கிறது. ஆச்சாரியாரின் மசோதா இதுவரை இருந்துவந்த பத்திரிகைச் சட்டங்களையெல்லாம் ஒரே வரியில் 'செல்லாது' என்று தீர்த்துக் கட்டிவிடுகிறது; மகிழ்ச்சியடையவேண்டிய செய்திதான்! ஆனால் பழைய சட்டங்களிலிருந்த கொடுமைகளெல்லாம் புதுச் சட்டத்தில் ஒன்று திரட்டப்பட்டு மெருகு கொடுக்கப்பட்டிருக்கின்றன. பத்திரிகை நடத்துவோர்க்கும் அச்சக நிர்வாகிகளுக்கும் இதுவரை இருந்து வந்த சங்கடங்கள், தொல்லைகள், புதுச் சட்டப்படி இனிமேலும் நீடித்துவரும்; பழைய சட்டங்கள் வழங்காத புதுக் 'கொடுமை'களையும் இச்சட்டம் வழங்குகிறது! ஆச்சாரியார், மசோதாவை ஆதரித்துப் பேசும்போது மிகவும் நயமாகப் பேசியிருக்கிறார்; உவமைகளையும் கதைகளையும் வாரி இறைத்திருக்கிறார். ஆனால் பத்திரிகையாளர்கள் சுதந்தர இந்தியாவில் ஆச்சாரியார் மசோதா மூலம் விலங்கு பூட்டப்படுகிறார்கள் என்றே சொல்லவேண்டியிருக்கிறது.

நீதிமன்றம் மூலம் ஜாமீன் கேட்பது, நடவடிக்கை எடுப்பது என்று மாறுதல்களைக் காட்டியிருந்தாலும், மசோதா பத்திரிகைகளின் உரிமைகளைப் பேரளவுக்குப் பறிமுதல் செய்துவிடுகிறது. அரசினரின் தவறான செயல்களைக் கண்டித்து எழுதுவது பத்திரிகைகளின் கடமை. இக்கடமையைச் சரிவர நிறைவேற்றாதபடி இம்மசோதா சட்டமானால் தடுத்துவிடலாம். எந்த ஒரு கண்டனத்திற்கும் பத்திரிகைமீது நடவடிக்கை எடுக்க மசோதா இடந்தருகிறது. அதனால்தான் நாட்டிலுள்ள எல்லாப் பத்திரிகைகளும் இம்மசோதாவை ஒருமுகமாகக் கண்டிக்கின்றன. இந்தக் கண்டனம் மசோதா நிறைவேறாதபடி தடுக்குமளவுக்கு வலுப்பெறவேண்டுமென்பதே நம் ஆசை.



முன்ஷியின் நாகரிகம்

'அரிசி சாப்பிடுகிறவர்கள் அநாகரிகமானவர்கள்' என்று பொருள்படும்படி பம்பாயில் சனம் முன்ஷி பேசியிருப்பது தென்னிந்தியாவையே பெரிய பரபரப்புக்குள்ளாக்கி விட்டது. 'பஞ்சாப்பில் அரிசி உபரியாக இருக்கிறது; அதனை அனுப்பச் சொல்' என்று இருக்குமிடம் காட்டினாற்கூட 'அதை அங்கே அனுப்பமுடியாது; வங்காளத்துக்கும் பம்பாய்க்குந்தான் அனுப்பப் போகிறோம்' என்று தட்டிக் கழிக்கத் தெரிகிறது. 'பர்மாவில் அதிக அரிசி இந்தியாவுக்குக் கிடைக்கும்' என்று இந்தியாவிலுள்ள பர்மாத் தூதுவர் கூறுகிறார். அதனைக் கவனித்துப் பர்மாவிடம் பேரம் பேசத் தெரியவில்லை. இந்நிலையில் கனம் முன்ஷியின் அலட்சியம் எந்த அளவுக்கு வளர்ந்துவிட்டதென்பதற்கு அவர் 'நாகரிகப்' பேச்சு நல்ல சான்று. சென்னை அமைச்சர்கட்குத் தன்மானம் இருந்தால் இந்த அவமதிப்பை இனிமேலும் பொறுத்திருக்கக்கூடாது. முன்ஷியின் போக்குக்கு முற்றுப்புள்ளி வைக்க உடனே முனையவேண்டும். இல்லாவிட்டால் செப்டம்பர் அக்டோபர் மாதங்களில் சென்னை மாகாண உணவுநிலை மிகவும் கேவலமாகிவிடச் சந்தர்ப்பமிருக்கிறது. அரசினர் ஆறு அவுன்ஸ் அரிசியையாவது சரிவரக் கொடுக்கப் பொறுப்பேற்பது அவசியம்.

★★★

மணமக்கள் வாழ்க!

புரட்சிக்கவிஞர் பாரதிதாசன் அவர்களின் இரண்டாம் மகளார் திருமதி வேனிலார்க்கும் மேல்பட்டாம்பாக்கம் திரு. சா. மாணிக்க முதலியார் மகனார் திருவாளர் தண்டபாணிக்கும் 12—9—51 அன்று மணமகன் இல்லத்தில் பூவாளூர் அறிஞர் அ. பொன்னம்பலனார் தலைமையில் திருமணம் சிறப்புற நடந்தேறியது. பாராட்டுரைகட்கிடையே மணமக்களுக்குப் பரிசுகளும் வாழ்த்துக்களும் வழங்கப்பட்டன.

வாழ்க வேனிலார் – தண்டபாணி!

★

'பொன்னி' எழுத்தாளரும் இளங்கவிஞருமான திரு. நாரா நாச்சியப்பன் — நாகம்மை திருமணம் இராமநாதபுர மாவட்டம் ஆத்தங்குடியில் 16—9—51 அன்று சிறப்பாக நடைபெற்றது. கோனாபட்டு திருவாளர் பழ. ப. பழனியப்பசெட்டியார் அவர்கள் முன்னின்று தமிழ்த் திருமண முறைப்படி நிகழ்ச்சிகளை நடத்திவைத்தார்கள். தோழர் தில்லைக்கோவிந்தன் வாழ்த்துரை வழங்கினார். மணமக்களுக்குப் பரிசுகளும் வாழ்த்துக்களும் வழங்கப் பட்டன.

வாழ்க நாச்சியப்பன் – நாகம்மை!

★

சென்னை 'போர்வாள்' ஆசிரியர் திரு. மா. இளஞ்செழியன் – சுந்தராம்பாள் திருமணம் 12–9–51 காலை கோகலே மண்டபத்தில் திரு. இரா. நெடுஞ்செழியன் எம். ஏ., தலைமையில் சிறப்புற நடைபெற்றது. அன்று மாலையில் பாராட்டுக் கூட்டமும் இன்னிசை விருந்தும் நிகழ்ந்தன. அறிஞர் பெருமக்கள் மணமக்களை வாழ்த்தினர்.

வாழ்க இளஞ்செழியன் – சுந்தராம்பாள்!

★

இராமநாதபுர மாவட்டம் லெட்சுமிபுரம் திருவாளர் முத்து. மு. முத்துக்கருப்பஞ் செட்டியார் அவர்களின் தங்கை திருவளர் செல்வி மீனாட்சி—பழனியப்பன் திருமணம் மணமகள் இல்லத்தில் 14-9-51 அன்றுசிறப்பாக நிகழ்ந்தது. மணமக்களுக்குப் பரிசுகளும் வாழ்த்துரைகளும் வழங்கப் பெற்றன.

வாழ்க மீனாட்சி – பழனியப்பன்!

★★★

யாருக்கு உங்கள் வாக்கு?

***பெரியார் போன்ற உழைப்பாளிகள், அண்ணா போன்ற ஆற்றலறிஞர்கள், ஜின்னாபோன்ற நெஞ்சுறுதி மிக்கோர், ஓமந்தூரார் போன்ற ஒழுக்க சீலர்கள், வ. உ. சி. போன்ற வைராக்கிய சித்தர்கள், தியாகராசர் போன்ற தியாகிகள் இருந்தால் என் வாக்கு எழில் பெறும்! இல்லையேல் அழியும்.

து. ரா. வீரண்ணன்
துறையூர்

★

இயற்கையை வணங்கி, 'இறைவன் ஒருவனே; அவன் எங்குமுள்ளான்; எவ்வுருவமும் இல்லான்' என்ற சீரிய கொள்கையுடன், 'யாதும் ஊரே' என்ற பரந்த நோக்கங்கொண்டு எல்லோரும் சகோதரர் என்ற கருத்துடன் வாழ்ந்து வந்தவர் நாம். நாம் (தமிழர்) ஓர் தனி இனம். தன்னலக்காரரின் சூழ்ச்சியினால் தாழ்ந்து போனோம். நாடாண்ட இனம்; எனினும் நயவஞ்சகர்களிடம் சிக்கி நசித்துப்போனோம். சரிதமும், இலக்கியமும் சான்றோர் சொல்லும் தமிழகம் தனி நாடாக இருந்ததை மெய்ப்பிக்கின்றன. நம் நாடு பாலைவன நாடல்ல, பிறரை எதிர்பார்த்து வாழ. நாமும் பேடிகள் அல்ல, பிறர்க்குப் புறமுதுகாட்டி ஓட; நாம் (தமிழர்கள்) மாவீரர்கள்; முடியுடை வேந்தரின் சந்ததியார். யவன நாட்டுக் கலங்கள் நம் தமிழ்நாட்டுக் கடற்கரையை முத்தமிட்டன. தமிழ்நாட்டு முத்துக்களை இத்தாலிய நாட்டு எழிலரசிகள் தங்கங்களைக் கொடுத்து வாங்கினார்கள். தமிழ்நாட்டு மன்னன் ஒருவன் ஈழநாடுசென்று வெற்றி பெற்றான். இமயத்தில் சேர, சோழ, பாண்டியர்களது இலச்சினை பொறிக்கப்பட்டது. தமிழர்களை எதிர்ப்பார் யாருமில்லை. எட்டுத் திக்கும் வெற்றிமுரசு கொட்டினார்கள். போரும் காதலும் அவர்கள் போற்றிய பொருள்கள். ஆனால் இன்று? நம் மக்கள் சூது மதியினரிடமும், சுரண்டிப் பிழைப்போரிடமும், சுக வாழ்வுக்காகப் பிறரைக் கசக்கிப் பிழிவோரிடமும் ஜாதி வெறியரிடமும் சிக்கிச் சீரழிந்து கிடக்கின்றனர், என் இந்நிலை? இதனைச் சிந்தித்து தன் தாய் நாட்டின் (தமிழ்நாட்டின்) விடுதலை ஒன்றையே குறிக்கோளாகக் கொண்டு 'அரசியல் மூலம் நாம் வேண்டுவது சில்லறைப் பதவி

*** ரூபாய் மூன்று பரிசு பெற்ற கடிதம்

களை அல்ல, சிங்கார வாழ்வை அல்ல, நமது இனத்தின் விடுதலை ஒன்றே!' என்று எவன் ஒருவன் பணி புரிகிறானோ அவனே வீரன்—விவேகி. அப்பேர்ப்பட்டவருக்கே நமது வாக்கை வழங்கவேண்டும்.

ஆ. தா. சிவாஜி
திருத்துறைப்பூண்டி

★

காங்கிரஸ் பெரிய ஸ்தாபனம்; தனித்தனியே தேர்தலில் அதை வெல்ல முடியாது. எனவே எல்லாக் கட்சியும் சேர்ந்து போட்டியிடுவோம். அப்போதுதான் எல்லோரின் பொதுநலத் திட்டங்களும் வெற்றியாகும். இன்றேல் பாழாகும். மொழிவாரி மாகாணத்திற்குத் தனியரசு; பூமிதார் போன்ற பலரூபத்தாரின் சொத்தைப் பறிமுதல்; கல்வி முறையில் அடிப்படை மாறுதல்; ராணுவ பட்ஜட்டை 75 சதவீதம் குறைத்தல்; ஆசிரியர்களின் அந்தஸ்தை உயர்த்தல்; உழவனுக்கு நிலம்; வேலை செய்பவனுக்குப் பணம்; ஜாதி, மதம், நிறம் இதற்குச் சாவுமணி; இந் நோக்கம் கொண்ட ஐக்கிய முன்னணிக்கே என் ஓட்டு.

பி. வி. தாமஸ்
ஆண்டர்சன்பேட்டை

★

நம் நாடு—தென்னாடு—திருநாடு, வெளியார் ஆதிக்கத்திலிருந்து விடுபடவேண்டும்; விடுபட்ட நாட்டிலே, மக்கள் விவேகிகளாக வாழவேண்டும்; விவேகிகளாக வாழ, மனதிற்கு 'ஒவ்வாத' புராண—இதிகாசங்கள் ஒழியவேண்டும்; அரசியலிலே – பொருளாதாரத்திலே, அணுவளவும் அந்நியனின் ஆதிக்கம் அரசோச்சக்கூடாது. சமுதாயத்திலே, தீவிர திட்டங்கள் தீட்டப்படவேண்டும். உதாரணமாக, 'விதவை வாலிபன்' ஒருவன், விதவைப் பெண்ணைத்தான் மணக்கவேண்டும்; திருமணங்கள் அத்தனையும் 'தமிழ் முறைப்படி' தான் நடக்கவேண்டும்; ஆண்—பெண் அனைவரும், குறைந்தபட்சம் 'ஆங்கில அறிவு' பெறும்வரை, அதாவது, எஸ். எஸ். எல். சி. வரை அவசியம் படிக்கவேண்டும்; அரசாங்க அலுவலிலே—நீதிமன்றங்களிலே—மற்ற தொழில் துறைகளிலே, 'தமிழ்' தான் முதன் மொழியாக ஆகவேண்டும்; உலக மொழியான 'ஆங்கிலம்' இரண்டாவது மொழியாக வேண்டும். தமிழகத்திலே மிகப் பெரிய வருமான நிலையங்களான 'துணி ஆலைகள்—பஸ் போக்குவரத்துக்கள்—தொழிற் சாலைகள் சினிமா சம்பந்தப்பட்ட தொழில்கள்—சிற்றுண்டிச்சாலைகள்—மற்ற, மிகப் பெரிய தொழில் துறைகள், அத்தனையும் தேசியமயமாக்கப்பட வேண்டும்...... என்பதான உறுதி படைத்தவருக்குத் — 'தீவிர அபேட்சகருக்கு' என் உரிமைச் சீட்டைவழங்குவேன்.

தன. நடராசன்
திருப்பத்தூர்

பைத்தியக்காரி

வாணிதாசன்

பைத்தியக் காரி! பைத்தியக் காரி!
அவளுக்கு மக்கள் அளித்த பெயரிது.

"பைத்தியக் காரி! பைத்தியக் காரி!"
கூக்குர லிட்டனர் குறும்புச் சிறுவர்கள்;
தொடர்ந்தனர் அவளை; சூழ்ந்து கூவினர்;
முகத்தை நீட்டினர்; விழித்துப் பார்த்தனர்;
கையைத் தட்டிக் கத்தினர்; குதித்தார்;
கல்லெடுத்து வீசினர்; கைக்கோல் நீட்டினர்;
சிரித்தனர்; துரத்தினர்; செல்வழி மறித்தனர்.

திரும்பிப் பார்த்தாள்; சிரித்தாள்; தேய்ந்த
அரும்பு முல்லை அரும்பிற்று! நீள்விழி
உணர்வறு பார்வை ஓடும்; நிலைக்காது;
முகிலிடைப் பட்ட முழுமதி முகத்தில்
புகையிடைப் பட்ட ஆடியாம் கன்னம்!

செம்மை தேய்ந்த இதழில் சிறுநகை
தேய்ந்தது; சொற்கள் தேய்ந்து சிதறின;
வதங்கிய சிறுகொடி பதுங்கிய இடுப்பு!
மழையிலா மூங்கில் வளையிலாக் கைகள்!
கண்டதை எடுத்தன! கருகிய உடலில்
பொத்தல் ஆடை தொத்திக் கிடந்தது.
சிரித்தாள்... சிரித்தாள்... குலுங்கச் சிரித்தாள்...
"பைத்திய உலகம்! பைத்திய உலகம்!"
என்றாள்... ஏதோ முணறினாள்; அழுதாள்;
சிரித்தாள் மீண்டும்; அதையே செப்பினாள்.

வெள்ளிக் குழம்பை மேக விளிம்பில்
அள்ளித் தீட்டும் அந்தி வானம்:
செக்கர் சிந்திய செந்தீச் சுடரை
மந்திகள் பார்த்து மருளும்; வழுக்கைக்
குட்டிகள் தாய்மடி கெட்டியாய்ப் பற்றும்;
சாலைத் தென்னை ஓலை தவழ்ந்து
மாலைப் போதின் மாலை நுகர்ந்து
மாலை வாழ்த்தும் மாலைத் தென்றல்

கருங்குயில் தோப்பில் தமிழ்விருந் தூட்டும்;
மேற்கில் பரிதி மெல்ல நழுவ
வீட்டை நோக்கி விரைந்து நடக்கும்
மாட்டை யோட்டி வந்தான் குப்பன்.
பாடும் அருவி பாடத் தூண்டியது.
பாடினன் பள்ளு! தமிழ்ச்சுவை பாய்ந்தது!

குப்பன் அவ்வூர்க் குடிகளில் ஒருவன்;
முதலியார் சாதி; முதல்சிறி துடையவன்;
எழுதப் படிக்க எண்ணைத் தெரிந்தவன்;
மனைவி இறக்கத் துணைவி தேடாது
வாழ்க்கையில் சலித்து வாழ்ந்து வருபவன்.
காலம் மக்கள் கருத்தை மாற்றும்!
புள்ளும் மாவும் உள்ளம் கிளற
எத்தனை போழ்துநாம் இப்படி வாழ்வதோ
இல்லோர்க் கெல்லாம் இல்லென் றுது
நல்லறம் செய்ய, இல்லம் பேண,
களைத்து வருவேளை உளத்து மகிழ்வூட்ட,
துன்பம் விலக்கி இன்பம் நல்க,
அமைச்சு போன்றே ஆய்வுரை கூற,
திருத்திய உண்டி அருத்தி மகிழ
மனைவி வேண்டும்! மனைவி வேண்டும்!
இப்படிப் பலபல எண்ணி நடந்தான்.
"அண்மையோ சேய்மையோ அணிபெறு மூதூர்!"
என்றொரு மணிக்குரல் இசைத்தது பின்புறம்;
திரும்பிப் பார்த்தான் கரும்பு மொழியை;
கரிய மரத்தில் கடைந்த ஒளிச்சிலை!
வான்தவழ் மதியம்! தாமரைப் பொய்கை!
வண்டு! தீந்தமிழ்! வாளை! மூங்கில்!
இத்தனை இயைந்த இன்ப இருப்பிடம்!
எழுதா ஓவியம் எதிர்வரக் கண்டான்.

கலந்தது நெஞ்சம்! கலந்தனர் வாழ்வில்!
கன்றும் காலியும் ஒன்று ஒன்றாக
வளர்ந்தன; அவர்கள் வாழ்வும் வளர்ந்தது!
வீடும் வயலும் விளைவைப் பெருக்கின;
ஆடும் மயிலவள்! அவன்கார் மேகம்!
அவள் யாழ்! அவன் அதை மீட்டும் மெல்விரல்!
உடல் அவள்! உயிர் அவன்! இயக்கமோ உயிர்மெய்!
தமிழ் அவள்! அவன்தமிழ் தந்த கலித்தொகை!

அகப்பொருள் இலக்கணம் இலக்கிய மன்ன
வாழ்ந்தனர்; மற்றவர் வாழ வாழ்ந்தனர்.

ஒருநாள் குப்பன் உயிர்போன் ருளின்
தாழ்ந்த பிறப்பைச் சாற்றக் கேட்டான்;
உண்மையா என்ருன். உண்மை என்ருளவள்;
மானம் அழிந்ததாய் மனத்துள் புழுங்கினுன்.
ஏசலும் பூசலும் எழுந்தொலிப் பனபோல்
எண்ணினுன்; சோர்ந்தான்; எங்கோ நோக்கினுன்;
சாதிப் பிரிவும் தாழ்வும் உயர்வும்
மனத்திரை முன்னர் வந்துவந் தாடின.
"கண்ணே! மணியே! விண்ணே! மழையே!
காவியச் சுவையே! ஓவிய உருவே!
வாழ்ந்தோம் பலநாள்! மறக்கவா முடியும்?
எருமை நெய்யரி எனவாழ் மக்கள்
சாதியைக் குலத்தைத் தாங்கி வாழ்கின்றனர்;
இணைந்துநாம் வாழ இனிமுடி யாது...
மீறி வாழ்ந்தால் ஊரி லுள்ளோர்
தொல்லை தருவார்; கொல்லை விளையாது;
விலக்குவார் நம்மை; யாவையும் விலக்குவர்;
இங்குளோர் உன்னை இன்னுள் என்றே
அறியும் முன்னர் அயலூர் சென்று
வாழ்ந்திரு; நானே வந்துபோய் இருப்பேன்"
என்ருன் குப்பன்; ஏந்திழை கலங்கினுள்.
கெஞ்சினுள், வெதும்பினுள்; கீழ்விழுந் தழுதாள்;
நஞ்சுண் டிறப்போம்; நாம்இனிப் பிரியோம்;
வாழ்வோம் ஒன்றி; வருதுயர் வரட்டும்;
உள்ளக் கலப்பே கொள்ளை இன்பமாம்!
துயரும் தொல்லையும் தூள்படச் செய்வோம்;
மூடர்க் கறிவை மூட்டுவோம்; அதனுல்
கேடுகள் வரினும் இன்பமே கேடுகள்!
எதிர்ப்பிடை வாழ்வதே இன்பத்துள் இன்பம்!
எதிர்ப்போம் மூட உலகை எதிர்ப்போம்!
என்ருள்; கெஞ்சினுள்; இரு தாள் பிடித்தாள்
மறக்க முடியா மாணிக்கப் புதையல்!
மங்கையின் மாண்பும் வாய்மையும் தாய்மையும்
ஒருபுற மிழுக்க; ஒருபுறம் சாதிச்
சனியன் இழுக்கத் தவித்தான் பேதை!
பாதியில் வந்த சாதிப் பிரிவு
தலை தூக்கியது; தாழ்ந்தான் குப்பன்.

"முடியாது...ஊர்ப்பகை ஏற்க முடியாது..."
என்றான் குப்பன். எதிர்த்தாள் மங்கை.
வெருட்டி அவளை வேர்கல்ல நினைத்தான்;
தடியைத் தூக்கி "நடநீ" என்றான்.
மறுத்தாள்; அவனோ கறுத்துச் சீறினன்.
தாக்கினன்; தாங்கினள். மீண்டும் தாக்கினன்.

தாக்கிய தடியைத் தட்டிப் பறித்தாள்.
"இதுதான் ஆண்மையோ? இதுதான் ஆண்மையோ?
மலரைக் கசக்கினய்; மலர்ச்செடி அழித்தாய்;
மற்றையோர் பேச்சை மறையென நம்பினய்;
வஞ்சகர் வாழ வகுத்தார் சாதி.
சாதியும் குலமும் காதலுக் கேது?
மேதியும் பெற்றமும் வெவ்வே றாகும்!
மடமை மக்களுள் நிலவும் சாதிகள்!
அன்றே இவையெலாம் ஆழ்ந்துபார்க் காமல்
அழித்தாய்; நீமட்டும் அழியா திருப்பதோ"
என்று சீறினள்; எடுத்தாள் தடியை...

ஓடினன் குப்பன்; ஓடினன்...ஓடினன்...
"பைத்தியம், பைத்தியம், பைத்தியம்!" என்றே
பலரிடம் கூறிப் பட்டங் கட்டினன்;
கட்டி வைத்துக் கொட்டி யடக்கினன்.
பைத்திய மற்ற பாவையை முற்றிய
பைத்திய மாக்கினன்; பைத்தியக் காரன்!

உண்மை உணரா உலுத்த மக்கள்
பைத்திய மென்றே பறையடித் தார்கள்.
வஞ்சகர் வாழ மற்றவர் மீது
நெஞ்சறி பொய்யை நீட்டிக் கூறுவர்,
ஒத்துக் கேற்ற மத்தளம் இசைக்கும்
உதவாக் கரைகள், மட்டிகள்
வாழ்வதால் தமிழர் வாழ்விழந் தாரே!

பொழுது போக்கு

அண்ணி

இன்று வெளிவரும் தமிழ்ப் படங்களிலே, நூற்றுக்குத் தொண்ணூற்றொன்பது காதல் காட்சிகள் என்று கூறிக்கொண்டு கண்கொண்டு பார்க்கச் சகியாத ஆபாசக் காட்சிகள் நிறைந்த படங்களாகத்தான் வெளிவருகின்றன. அடுப்பங்கரைக் காட்சியாயிருந்தாலும் — ஆண்டவன் சந்நிதானக் காட்சியாயினும் அங்கு காதல் பேச்சுக்களும் கண்ணடிப்புப் படலங்களும் கற்பழிப்புச் சம்பவங்களும் கட்டாயம் இருக்கத்தான் செய்யும் நம் தமிழ்ப் படங்களிலே! சற்று கூர்ந்து நோக்குவோமானால் எல்லாப் படங்களின் மூலக் கருத்தும் ஒரே அடிப்படையில் தான் இருக்கும்! கதாநாயகன்—கதாநாயகி. இவர்களிடையிலே ஒரு வில்லன். இந்த கதாநாயக—நாயகிகளின் காதல் விளையாட்டுக்களுக்கு வில்லன் மூலம் சில இடையூறுகள் ஏற்படும். முடிவில், கதாநாயகன் மூலமாகவோ, வேறு விதமாகவோ வில்லன் இறக்க, காதலர்கள் களிப்புடன் பூஞ்சோலையிலே கூடுவார்கள்— அல்லது 'ரோல்ஸ்ராய்ஸ்' மாடலில் இருவரும் ஏறிக்கொண்டு ஜம்மென்று பீச்சுக்குப் போவார்கள் ஒரு காதல் பாட்டைப் பாடிக்கொண்டு! இதனிடையில் சிறிதும் பொருத்தமின்றி, ஒரு சில குமாரிகளின் தலைவலியைத் தரும் நடனங்கள் ஒரு அரை டஜன்! அந்நடனங்களைப் புகுத்தாவிடில் படம் வெற்றியடையாது என்பது நம் தமிழ்ப் பட முதலாளிகளின் சீரிய கருத்து.

ஆனால், 'அண்ணி' படத்திலே காதல் காட்சிகளும் இல்லை; கத்தரிக்காயும் இல்லை. கற்பழிக்கும் சம்பவங்களோ—கண்ணடிக்கும் படலங்களோ கிடையாது. தலைவலியைத்தரும் நடனங்களையோ, வெறுப்பையூட்டும் கோமாளிக் கூத்துக்களையோ காண முடியாது. ஆனால் உணர்ச்சியூட்டும் உன்னத நடிப்பைக் காணலாம்; உள்ளத்தை உலுக்கும் சம்பவங்களைக் கண்டு உள்ளம் உருகலாம்; தாய்மையுணர்ச்சி பொங்கி எழுவதைப் படம் முழுவதும் காணலாம்!

காதல் கட்டங்கள் நிறைந்த படங்களையே பார்த்துப் பார்த்து அலுத்துப் போன நமக்கு— அலுப்பைத் தீர்க்கும் அருமருந்

தாக 'அண்ணி' படத்தை அளித்திருக்கிறார்கள் பிரகாஷ் புரொடக்ஷன்ஸார்! மிகுந்த பொருட் செலவிலே தயாரான—வீரம், காதல், சோகம், நகைச்சுவை, நடனம், கத்திச்சண்டைகள் முதலிய அனைத்தும் நிறைந்த எத்தனையோ படங்கள் மண்ணைக் கவ்வியிருப்பதைக் கண்டிருக்கிறோம். ஆனால் இவையேதுமின்றி, முற்றிலும் மாறான கதைப் போக்கையுடைய 'அண்ணி'யை மிக்க துணிச்சலோடு—மக்களுக்குப் பிடிக்கும் வகையில் தயாரித்து அதை வெற்றிகரமாகப் பவனி வரச் செய்த 'பிரகாஷ் புரொடக்ஷன்ஸா'ருக்கு நம் வாழ்த்துக்கள்!

கிராமத்திலே ஆனந்தமாக வாழ்ந்து வந்த பாலையா-யசோதா தம்பதிகளிடம், பாலையாவின் சிற்றன்னை தன் மகன் கோபுவை ஒப்படைத்துவிட்டு நிம்மதியாகக் கண்ணை மூடிவிடுகின்றாள். கோபு பெரியவனாகிறான். மற்ற சிறுவர்களைச் சேர்த்துக்கொண்டு அவன் செய்யும் துடுக்குத்தனங்கள் எண்ணற்றன! பூவும் பிஞ்சுமாக இருந்த ராமையாவின் தோட்டத்தைப் பாழ்படுத்திவிடுகின்றான். ஊர் நாட்டாண்மைக்கார வெங்கையாவின் தலையின்மீது பந்தை எறிந்து அவன் கோபத்திற்கு ஆளாகிறான். ஏழைப் பெண்ணொருத்திக்கு மாதுளம் பழம் ஒன்று தர மறுத்த அதே வெங்கையாவின் தோட்டத்தையும் அழித்துவிடுகின்றான். அவ்வூர் ஜமீன்தாரின் மகனை நையப் புடைத்து அனுப்பிவிடுகின்றான்! அவன் செய்யும் ஒவ்வொரு காரியங்களிலும் நியாயம் இல்லாமலில்லை! வகுப்பில் செய்யும் அட்டகாசங்களும் ஆசிரியரைக் கேட்கும் கேள்விகளும் ஆசிரியரின் மூளையையே குழப்பிவிடுகின்றன! கடைசியில் அண்ணன் பாலையாவின் கோபத்திற்காளாகி, வீடு இரண்டாகப்பிரிக்கப்பட்டுத் தனியே சிலநாள் வாழ்கின்றான். முடிவில் யாவரும் மதிக்கும்வகையில் தேச சேவகனாகிறான். இதைக் கண்ட அண்ணியின் மனமும் பூரிக்கின்றது. கதையின் சுருக்கம் இது.

சாதாரணமாக ஒவ்வொரு குடும்பத்திலும் நிகழும் நிகழ்ச்சிகளே நிறைந்திருப்பதால் படம் நம்மை மிகவும் கவர்ந்துவிடுகின்றது. கோபுவைப் போன்ற துடுக்குத்தனம் நிறைந்த எத்தனையோ சிறுவர்களை நம் குடும்

வாழ்க அறிவுடை நம்பி!

சென்னை **10-9-51** மாலை 5 மணிக்கு நா. இராசவேல்—சரசுவதி'யின் மகன் அறிவுடை நம்பி'யின் ஓராண்டு நிறைவு விழா, 'பொன்னி' ஆசிரியர் முருகு சுப்பிரமணியன் தலைமையில். புரட்சிக் கவிஞரின் வாழ்த்துடன் துவங்கிது. உள்ளூர், வெளியூர் நண்பர்கள் பல்லோர் கலந்து கொண்டனர். தலைவர் முன்னுரையைத் தொடர்ந்து. தோழர்கள் — **பத்மன் செல்லப்பன், கி. சிங்கமுத்து, ப. நாகலிங்கம்** முதலானோர் பாராட்டிப் பேசினர். பல வாழ்த்துச் செய்திகளும், பரிசுகளும் வழங்கப்பட்ட பின், நா. இராசவேல் நன்றிகூற, விழா இனிது முடிந்தது.

பங்களில் காண்கின்றோம். யசோதாவைப் போன்று மைத்துனன் மீது பாசம் கொண்ட அண்ணிமார்களும், துர்க்கம்மாவைப் போன்ற காலகண்டிகளும் நம் குடும்பங்களில் இருக்கத்தான் செய்கிறார்கள்!

கோபியாக நடிக்கும் சிறுவன் சேதுவும் அண்ணியாக நடிக்கும் ஜி. வரலக்ஷ்மியும், வெகு எளிதில் நம் மனத்தில் இடம் பெற்றுவிடுகின்றனர். சேதுவின் நடிப்பைக் காண்பவர்கள், இப்படம் அவன் நடிக்கும் முதல் படம் என்று கூறமாட்டார்கள். இயற்கையாக, 'ஓவர்' இல்லாமல் நடிக்கிறான், கடைசி வரையில்! ஜி. வரலட்சுமிதான் ஒரு குணசித்திர நடிகை என்பதை இப்படத்தின்மூலம் நிரூபித்துவிடுகின்றார்.

வசனம் எளிய நடையில் இருக்கின்றது. இருப்பினும், இரண்டொரு இடங்களில் 'மைத்துனன்' என்ற வார்த்தைக்குப் பதில், 'மச்சான்' என்ற பதத்தைக் கையாண்டிருக்கிறார் வசனகர்த்தா. இவ்விரு வார்த்தைகளுக்கும் அர்த்தம் வெவ்வேறு என்பதை அவர் அறியவில்லை போலும்.

படப்பிடிப்பு நன்றாயிருக்கிறது. இயற்கைக் காட்சிகள் கண்களுக்குக் குளுமையாயிருக்கின்றன. ஒலிப்பதிவு சுமார்தான். யாவரும் பார்க்க வேண்டிய படம் 'அண்ணி'.

—சிகேயார்.

மாதவிடாய் நின்றுபோனதா?

நிகரற்ற மருந்து (தேவி பில்ஸ்) REGD. BY CENTRAL DRUGS LABORATORY OF GOVT. OF INDIA. UNDER NO. CDL / 688

எக்காரணத்தினாலும் எத்தனை மாதமானாலும் நின்றுபோன மாதவிடாய் அதிசுலபமாகவும் அதிசீக்கிரமாகவும் தவறாமல் உடனே வெளியாகும். அநேக நற்சாட்சிப் பத்திரங்கள் பெற்ற திவ்ய ஔஷதம் உத்திரவாதமுள்ளது. போலி மருந்துகளை வாங்கி ஏமாறாதீர்கள். விலை ரூ. 8-8-0 சாதாரண கேஸ்களுக்கு (Ordinary) ரூ. 10-8-0 மாதங்களான கேஸ்களுக்கு (Special) (தபால் செலவு தனி)

கர்ப்பத்தடை

நிகரற்ற மருந்து (ஸ்பெக் பில்ஸ்)
Government Registered No. 266

12 நாட்கள் சாப்பிட்டால் 6 வருஷத்திற்கு சாஸ்வதமாகக் கருவைத் தடுக்கும். மாதவிடாய் தவறாது. அநேக நற்சாட்சிப் பத்திரங்கள் பெற்ற திவ்ய ஔஷதம். போலி மருந்துகளை வாங்கி ஏமாறாதீர்கள். (ஸ்பெக் ஜெல்லி) உபயோகித்தால் டெம்ப்ரவரியாக கருவைத் தடுக்கும். பில்ஸ் விலை ரூ. 12-0-0 ஜெல்லி விலை ரூ. 6-8-0 (தபால் செலவு தனி)

Mfgrs: **SEENU & CO., P. B. 1638, (6) Madras-1**

பிராஞ்சு : *134, SERANGOON ROAD* சிங்கப்பூர்

சிலோன் ஏஜண்ட்:

NEW COLOMBO MEDICAL STORES, 82, Main st., கொழும்பு-1

தொடர் கதை

ராஜா ராணி

தங்கமணி

கதை மலர்ந்தது

கீழ்த்திசை அடிவானத்தில் சூரியன் மலர்ந்தான்; மலர்கள் மலர்ந்தன; பறவைகள் மலர்ந்தன; மிருகங்கள் எல்லாம் மலர்ந்தன; மக்கள் மலர்ந்தனர்; "அண்ணா! பொழுது மலர்ந்தது. எழுந்திரு!" என்ற இனிய குரலைக் கேட்டுக் குடிசையின் ஒரு மூலையில் சுருண்டு முடங்கிப் படுத்திருந்த மாயவனும் திடுக்கிட்டுக் கண்மலர்ந்தான்; துள்ளித் துடித்து எழுந்தான். "அப்பா ஏற்றத்திற்குப் போய் விட்டாரா?" என்று தன் எதிரில் பல் துலக்கும் வேலங்குச்சியுடன் நின்றிருந்த தன் தங்கை ரஞ்சிதத்தைக் கேட்டான். "ஓ... அவர் போய் வெகு நேரமாயிற்றே!" என்று நீட்டி முழக்கிச் சொல்லிக் கொண்டே தன் அண்ணன் மாயவனிடம் வேலங்குச்சியை நீட்டினாள் ரஞ்சிதம். மாயவன் வேலங்குச்சியை வாங்கினான். அதைக் கடித்து மென்று பல்துலக்கிக் கொண்டே குடிசைக்கு வெளியே பாய்ந்தோடினான்.

ரஞ்சிதம், குடிசையின் மூலையிலிருந்த மாயவன் படுத்திருந்த ஓலைப் பாயை எடுத்தாள்; சுருட்டினாள்; மூலையில் வைத்தாள். துடைப்பத்தை எடுத்தாள்; வீட்டைப்பெருக்கிச் சுத்தப்படுத்தினாள்; துடைப்பத்தை மறுபடியும் ஒரு மூலையில் வைத்தாள்; போனாள்; அடுப்பங்கரைக்குச் சென்றாள். பானையிலிருந்த கேழ்வரகுக்கூழை ஒரு சிறு குவளையில் வார்த்து எடுத்துக்கொண்டு வந்தாள். அதற்குள் மாயவனும் முகத்தைக் கழுவித் துடைத்துக்கொண்டே வந்து உட்கார்ந்தான். கூழ் நிறைந்த குவளையை அவன் எதிரில் வைத்தாள். ரஞ்சிதம் கூட ஒரு பச்சை மிளகாயையும் கொடுத்தாள். ஓரிரண்டு நிமிஷங்களுக்குள் கூழையும் மிளகாயையும் உள்ளுக்குத் தள்ளிக் கொண்டு "ஒவ்வ்..." என்று ஏப்பம் விட்டுக் கொண்டே எழுந்தான் மாயவன். "இந்தா அண்ணா" என்று கைநிறைய வேர்க்கடலையை எடுத்து வந்து கொடுத்தாள் ரஞ்சிதம். மாயவன் அந்த வறுத்த வேர்க்கடலையை வாங்கி மடியில் கட்டிக்கொண்டான். கூரையில் செருகிவைத்த ஆடு மேய்க்கும் கழியையும், அத்துடனிருந்த முந்தியநாள் மூன்றணாவிற்கு வாங்கிய ஒரு சிறுகதைப் புத்தகத்தையும் எடுத்துக் கொண்டான்.

" தங்கச்சி, போய் வரட்டுமா?"

"உம்" என்றாள் ரஞ்சிதம். மாயவன் குடிசையை விட்டுக் கிளம்பினான். நேரே அவன் வேலைபார்க்கும் தங்கக்கோட்டைக் கிராமம் பெரிய பண்ணைக்காரர் வீட்டிற்குப் போனான் மாயவன்.

"என்னடா மாயவா! இவ்வளவு நேரமா?" என்று அதட்டினார் வீட்டுவாசலில் நின்றிருந்த பண்ணைக்காரர்.

"அவனோ கும்பகர்ணன். வேலைக்கு வர இவ்வளவு நேரமும் ஆகும், அவ்வளவு நேரமும் ஆகும்!" என்று, பண்ணைக்காரரின் பக்கத்தில் அப்போது தான் வந்து நின்ற அவருடைய மகள் சுகந்தி கையை அகல விரித்துக் காட்டிப் படபடத்தாள்!

"ம்...ம்..."என்று தலையைச் சொரிந்தான் மாயவன்.

"சீ, பற நாயே! மந்தையை ஓட்டிக்கொண்டு போ!" என்று எரிந்து விழுந்தாள், அந்தச் சுடுமூஞ்சி சுகந்தி. தன் அருமை மகளின் அதிகாரத்தைக் கண்ட பண்ணைக்காரர் மெல்லப் பல்லை இளித்தார்.

மாயவன் ஆட்டுப்பட்டியிலுள்ள சுமார் நூறு ஆடுகளை ஓரே மந்தையாய்க் கூட்டிக் கொண்டு கிராமத்திற்கு அருகிலுள்ள குறிஞ்சிக் காட்டை நோக்கி நடந்தான்.

"...ஹை ஹை! ட்ரியோ!...யோய்...ம்"

கொஞ்ச நேரத்திற்குள் ஆட்டு மந்தைகளைக் கூட்டி ஓட்டிக் கொண்டு குறிஞ்சிக் காட்டிற்குள் வந்து சேர்ந்தான் மாயவன். வழக்கம் போல ஆட்டு மந்தைகளை அருகிலிருக்கும் குறிஞ்சிக் குன்றின் பக்கமாய் மேயவிட்டான்; வழக்கமாய் உட்காரும் ஆலமரத்தடிக்கு வந்தான். அங்கிருந்த ஒரு தட்டையான மொட்டைப் பாறையின் மீது உட்கார்ந்தான். மடியில் திணித்து வைத்துக்கொண்டிருந்த கதைப்புத்தகத்தை எடுத்தான். மடியிலிருந்த வறுத்த வேர்க்கடலையைப் ஒவ்வொன்றாய்க் கொறித்துக் கொண்டே புத்தகத்துக் கதையைப் படிக்க ஆரம்பித்தான்........

1. சிங்கக் குட்டியின் பாய்ச்சல்!

பவளபுரி இளவரசனான ராஜசிம்மன் வில்லும் கையுமாகத் தன் தந்தையிடம் விரைந்தோடினான்.

" அப்பா! போய் வரட்டுமா?"

"போய் வாடா என் ரத்தினமே!" என்று ராஜசிம்மனைக் கட்டிப்பிடித்து நெஞ்சோடு அணைத்து முத்தமிட்டு விடை

கொடுத்து அனுப்பினார் சக்கரவர்த்தி. ராஜசிம்மன் சேனை பரிவாரங் களுடன் வேட்டைக்குக் கிளம்பினான்!

ஒரு நாள் பிரயாணத்திற்குப் பிறகு........

வெகு தூரத்திலுள்ள நாகமல்லி வனத்திற்கு வந்து சேர்ந்து கூடாரம் போட்டான் ராஜசிம்மன். இரண்டு, மூன்று நாட்களாக ஒரு மிருகம் கூட ராஜசிம்மனின் அம்புக்குப் பலியாகக் காணோம்! அவன் கண்ணில் பட்டால்தானே?

நான்காம் நாள். ராஜசிம்மன் தன் மெய்க்காப்பாளனை மகமேருவுடன் கூடாரத்தை விட்டுக் கிளம்பினான். நாகமல்லி வனத்தின் இண்டு இடுக்குகளிலெல்லாம் புகுந்து புகுந்து சென்றும்... ஒன்றும் பலனில்லை! ராஜசிம்மனும், மகமேருவும் களைத்துச் சோர்ந்து நின்ற சமயத்தில் திடீரென்று ஒரு சிங்கக் கர்ஜனை கேட்டது!

“ஆ, மகமேரு! இன்றைச்குக் கிளம்பிய வேளை நல்ல வேளை! நீ அப்படியே வா, நான் இப்படியே வருகிறேன்!” என்று அக மலர்ச்சியுடன் சொல்லிக் கொண்டே ராஜசிம்மன் ஒரு பக்கமாய்ச் சென்றான்; மகமேரு ஒரு பக்கமாய்ச் சென்றான்.

ராஜசிம்மன் வில்லிலே அம்பைத் திணித்துக் கொண்டு எங்கெங்கேயோ தேடினான். ஒன்றும் காணவில்லை. அதற்குப் பிறகு அந்தக் கர்ஜனையும் கேட்கவில்லை! ராஜசிம்மன் பெரும் ஏமாற்றத்துடன் திரும்பினான். “மகமேரு! மகமேரு!...” என்று கூப்பிட்டுக் கொண்டே நடந்தான். ஒரு பதிலும் இல்லை!

“ஹோய்...! மகமேரு...! மகமேரு...!” என்று ராஜசிம்மன் தொண்டை வலிக்க மீண்டும் மீண்டும் கத்தினான். உம்... அப்போதும் பதிலில்லை! அவன் எங்கே தொலைந்தான்?

ராஜசிம்மனுக்கு மனம் என்னவோ போலாகிவிட்டது! தண்ணீர்த்தாகம் நாக்கை வாட்டியது. ராஜசிம்மன் குளத்தைச் தேடினான். அருகிலே ஒரு சிறு குட்டையைக் கூடக் காணோம்! ராஜசிம்மன் அருகிலிருந்த ஓர் அரச மரத்தின் மீதேறி கலங்கரை விளக்கைப் போலப் பார்வையைச் சுழற்றி வீசினான். சற்று தூரத்

திலே ஒரு சிறு தாமரைக்குளம் தெரிந்தது. ராஜசிம்மன் மரத்தை விட்டு இறங்கினன். தாமரைக் குளத்தை நோக்கி அவசர அவசரமாய் நடந்தான். தாமரைக் குளத்தை நோக்கி வந்துகொண்டிருந்த ராஜசிம்மன் குளக்கரையில் தெரிந்த காட்சியைக் கண்டதும்...

கப்பென்று அருகிலிருந்த ஒரு மரத்தின் பின்னல் ஓடி ஒளிந்து மெல்லத் தலையை நீட்டி எட்டிப் பார்த்தான்.

குளக்கரையில் ஒரு சின்னஞ் சிறு தங்கை மூர்ச்சையாய் விழுந்து கிடந்தாள். அவளை உச்சியிலிருந்து உள்ளங்கால் வரைக்கும் மோப்பம் பிடித்தபடி நின்று கொண்டிருந்தது ஒரு சிங்கக்குட்டி!

ராஜசிம்மன் வில்லை எடுத்தான்; அம்புறாத் தூணியிலிருந்து ஓர் அம்பை எடுத்தான். வில்லில் பூட்டி, இழுத்து, சிங்கக்குட்டியின் கபாலத்தைக் குறி வைத்து...

ஜிவ்வென்று பாய்ந்து பறந்தது அம்பு! பாய்ந்து சென்ற அம்பு சிங்கக் குட்டியின் இடது கண்ணில் நறுக்கென்று தைத்த மறு விநாடி—?

"ஹாஆஹ்ஹாஆஹ்ஹாஆ!..." என்று நாகமல்லி வனமே நடு நடுங்கும் படியாய்க் கர்ஜித்துக் கொண்டே துள்ளியது; துடித்தது; அம்பு வந்த திசையை நோக்கி, ராஜசிம்மனை நோக்கிக் குபீர் என்று பாய்ந்தது சிங்கக் குட்டி!

ராஜசிம்மன் 'ஆ!' என்று வீறிட்டு அலறினன்!........

— ஆவலும் ஆசையுமாய்ப் புத்தகக் கதையை மேலும் படிப்பதற்குள் "கொட கொட...கொர்..." என்று திடீரென்று எழும்பிய சப்தத்தைக் கேட்டதும், மாயவன் புத்தகத்தை மடித்துக்கொண்டு சட்டென்று திரும்பிப் பார்த்தான்!

[தொடரும்]

உயர்ந்த ரக உற்பத்திகளுக்கு உகந்த இடம்.

ஸ்டார் ஆப்
இந்தியா
பென்சில்களுக்கு

★

மெட்ராஸ்
பென்சில் பாக்டரி

★

ஸ்டேஷனரி
சாமான்களுக்கு

★

வி. பெருமாள்
செட்டி & சன்ஸ்

★

சிறந்த வித்தோ,
அச்சு வேலைக்கு
ஹோ & கோ.

★

3, ஸ்டிரிங்கர் தெரு, சென்னை – 1.

தமிழ் விருந்து

தமிழ்த்தும்பி

9. பேசும் கிளியும் பேசாப் பாவையும்

'கொக்கரக்கோ' என்று கோழியின் குரல் காற்றுவெளியில் தவழ்ந்தது. அதைத் தொடர்ந்து சில பறவைகளின் 'கிரீச்' என்ற ஒலியும் கேட்டது. காலை இளங்காற்றில் இலை இனங்கள் சலசலத்தன. சாளரத்துக்குப் போடப்பட்டிருந்த திரைச் சீலை மெல்ல அசைந்தாடியது. அதன் அசைவினால் முன்னுக்குத் தள்ளப்பட்ட சிறு காற்றின் தாக்குதல் ஆனந்தியின் வட்ட முகத்தில் மோதிற்று. அகன்று, அழகாக அமைந்த தன்னிரு கண்களையும் திறந்து படுக்கையின்மேல் ஒருகூர்ந்த கண்ணோட்டம் செலுத்தினாள் அவள். தன் வலது தோளின்மேல் 'கதகத' வென்ற இன்ப வெப்ப உணர்ச்சியைத் தந்த தன் கணவனின் கைகளை அவள் மிருதுவாக வருடினாள். மயக்கச்சுழலில் தான் மீண்டும் போவதை அவள் அறிந்தாள்.

மீண்டும் கோழி கூவிற்று. அது ஆனந்திக்கு அதிகாலையின் கூவல் எனப்படவில்லை! நடு இரவில் ஏதோ இரவுக்காலப் பறவை கூக்குரலிடுகிறது என்று எண்ணினாள் அவள். விடிவதற்குத்தான் இன்னும் அதிக நேரம் கிடக்கிறதே என்று மஞ்சத்தில் புரண்டு படுத்தாள். மயக்க உலக இன்பத்தில் அவள் தன்னையும் தன்னைச் சூழ்ந்தவற்றையும் அறவே மறந்துவிட்டாள். தாமரையிதழின் மென்மையையும் மல்லிகைமலரின் மணத்தையும் வட்ட நிலவின் குளுமையையும் இளந்தென்றலின் இன்பத்தையும் காதலிசையின் சுவையையும் அவள் அனுபவித்தாள். அவளுக்குத் தான் எங்கே இருக்கிறோம் என்ற நினைவே இல்லை.

மறுபடி 'கொக்கரக்கோ' என்று காலைக்கோழி அலறிற்று. அது ஆனந்தியின் காதுகளில் நாராசமாகப் பாய்ந்தது. விழித்து படுக்கையை மறுபடி ஒரு பார்வையிட்டாள். தன்னருகே படுத்திருந்த தன் கணவனை அங்கு காணவில்லை! கண்ணைக் கசக்கி நன்றாக விழித்துப் பார்த்தாள். ஆம். கொஞ்சநேரத்துக்கு முன் தன் தோளில் இளவெயிலின் இன்ப வெப்பத்தைத் தந்த கரங்களை அங்கு காணோம்! விடியற்காலம் பறவைகள் காலை நேரத்தை வரவேற்க இனிய பண்களை எழுப்பின! அப்போது தான் ஆனந்திக்கு விடிந்துவிட்டிருந்தது தெரிந்தது. மஞ்

சத்தை நீங்கிச் சாளரத்துக்குப் போனாள். திரைச்சீலையைவிலக்கி தன் தோட்டத்து நடுவிலுள்ள தாமரைத் தடாகத்தை நோக்கினாள். நன்றாக மலர்ந்துவிட்டிருந்த செந்தாமரையும் வெண்தாமரையும் இளங்காற்றிலே ஒயிலோடு அசைந்தன. ஆம். காலை மலர்ந்து விட்டது!

தென்றல் தீண்டிநின்ற தன் முகத்தை ஆனந்தி தன் கைகளால் தடவிக்கொண்டாள். சிறு சிறு பள்ளங்களில் அவள் கைகள் போய் வருவதை அவள் உணர்ந்தாள். அவளுக்கு ஒரே ஆனந்தமாக இருந்தது. உடனே அவள் தான் அழகுபடுத்திக் கொள்ளும் கண்ணாடிக்கு முன் வந்தாள். அழகு முகம் கண்ணாடியில் பலமடங்கு அழகாகத் தெரிந்தது. கன்னத்தில் அங்கும் இங்கும் சில குறிகள்! கன்னப் பரப்பிலிருந்து சிறிது ஆழத்திலிருக்கும் சில சிறு பள்ளங்கள் முகவெளியில்! முகத்தைக் கீழே கவிழ்த்துக்கொண்டு அவைகளைத் தீண்டினாள் ஆனந்தி. அதில்தான் அவளுக்கு என்ன

வெட்கம் கலந்த மயக்க இன்பம்! அவற்றைக் கண்ணாடியில் பார்த்தாலோ முகம் சிவக்கும் நாணம்! படுக்கையைப் பார்த்தால் அதை விடப் பெரும் நாணம்! அந்த நாணத்திலே ஒரு தனிப்பெரும் இன்பம்! படுக்கை காலியாக இருந்தும் அதன்மேல் அவளுக்குத் தனிப் பரிவு! அவள் மனதிலே அதனால் ஏற்படும் ஒரு அமைதி கலந்த ஆறுதல்!

'தடதட' வென்று கதவு இடிக்கப்படும் சத்தம் ஆனந்தியை நினைவு உலகத்துக்கு இழுத்துவந்தது. அஞ்சனம் அழிந்த கண்களிலே கலக்கம் தோன்ற, அவள் கதவுகளைத் திறந்தாள். படைபோன்ற தோழிமார் பரிவாரம், படை வீரர் போர்க்களத்தில் பாயும் வேகத்தில் அவள் அறையில் நுழைந்தது. ஆனந்தியைச் சுற்றி தோழிகள் முற்றுகையிட்டனர். நடுவில் அகப்பட்டுக்கொண்ட ஆனந்தி தன்முகத்தைக்கைகளில் புதைத்துக்கொண்டு விரலிடுக்கில் தோழிகளைப் பார்த்தாள். தோழியர் அவளுக்குக் 'கிசுமுசு' மூட்டினர். முகத்தை மறைத்துக்கொண்டிருந்த ஆனந்தி 'கிசுமுசு' மூட்டின கைகளைத் தன் உடலிலிருந்து அப்புறம் தள்ளினாள். உற்சாக வெறியில் இருந்த ஒரு தோழி "அதோ, அவள் முகத்தைப் பாரடி" என்றாள்.

ஆனந்தி மறுபடி தன் முகத்தை உள்ளங்கைகளால் மூடிக்கொண்டாள். மறுபடி 'கிசுமுசு' மூட்டினர்தோழிகள். இம்முறை ஆனந்தி உடம்பை அப்படியும் இப்படியும் நெளித்தாளே தவிர, கைகளை முகத்திலிருந்து எடுத்துவிடவில்லை.

"எப்படியடி நேற்று இரவு?" என்று நேரடியாகக் கேட்டாள் ஒரு தோழி.

"அவர் முதலில் பேசினாரா, நீ முதலில் பேசினாயா?" என்றாள் சங்கோசத்தோடு மற்றொரு தோழி.

"அவர் முதலில் என்ன செய்தார்?" என்றாள் ஒரு கிண்டல்காரி. "அவர் என்னவெல்லாம் பேசினாரடி?"—ஆசையை அடக்க முடியா ஒருத்தி இப்படி ஒரு கேள்வி கேட்டாள்.

"இனி இரவுகள் உனக்குப் பகலைவிடத் தேவையல்லவா?" என்றாள் ஒரு கேலிக்காரி.

"அவள் முகத்தைப் பாரடி, அவர் நகங்கள்...விரலிடுக்கிலே கூடப் 'பளிச்' சென்று தெரிகிறது!" என்றாள் காரியவாதியான கூர்ந்த கண்நோக்குக் கொண்ட ஒருத்தி.

ஆனந்திக்கு முகமெல்லாம் 'குப்' பென்று இரத்தம் பாய்ந்தது. சிவப்புப் பின்னணியில் நகக்கீறல்கள் பின்னும் தெளிவாகத் தெரிந்தன. தோழிகள் சாடைமாடையாக நயன மொழியில் புதிர்மாதிரி பேசிக்கொண்டனர்! ஆனந்திக்கு வெட்கம் பிடுங்கித் தின்றது! ஆனால் அக் கீறல்களை

அவள் குறைகூறவில்லை. மாறாக அவற்றை வாழ்த்தித் தன்னுள் இன்பத்தைப் பெருக்கிக் கொண்டாள். மறுபடி தோழிகள் வம்பும் கேலியும் செய்யத் தொடங்கினர். அவளுக்கு ஏனடா கதவைத் திறந்தோம் என்றாகிவிட்டது. பாழாய்ப்போன கோழி இன்னும் கொஞ்சம் சீக்கிரம் கூவித் தன்னை எழுப்பிவிட்டிருந்தால்...? இந்த வம்புக்கு இடமில்லாதிருக்குமல்லவா? தோழிகள் கேட்கப்போகும் கேள்விகளுக்குப் பதில் யோசித்திருக்கலாம்? சில கேலிக் கேள்விகள் எழாதபடி தன்னைத் தயார்ப்படுத்திக்கொண்டிருக்கலாம் அல்லவா? பாழாய்ப்போன கோழி......!

'கலகல' வென்ற நகையொலி மிகப் பெரிதாக வளர்ந்துவிட்டிருந்தது. சிலர் கண்களால் பேசினர். சிலர் 'குசுகுசு' வெனக் காதுகடித்து இரகசியம் பேசினர். சிலர் சைகை மொழியில் பேசினர். சிலர் மிகப் பெரிதாகச் சத்தமிட்டுப் பேசினர்! என்ன கேலிப்பேச்சுகள், குறும்புச் சிரிப்புகள்! அப்பப்பா, என்னென்ன கேள்விகள்! இவர்களுக்கு எப்படித்தான் இவைகளையெல்லாம் கேட்கவேண்டுமெனத் தோன்றுகிறதோ? ஐயோ, ஆண்டவனே அவர்களுக்கு மொழியைமறக்கச் செய் அல்லது கேள்விகளைக் கேட்க வைக்காதே! அப்படிக்கேட்டால் நீயாவது அவைகளுக்குப் பதில் சொல்லு!

இந்துலேகா

சென்னைப் 'பொன்னி'க் கலை நிலையத்தார், உலக மொழிகளில் உயர்ந்த செய்யுள் (இலக்கிய) மணிகளைத் தமிழ்க்கலை நிலையத்தில் வருவார்க்குத் தரும் விருந்தாய்ப் பரிமாற நினைத்து, முதலில் வெளியிட்ட 'இந்துலேகா' — நவீனகத்தைப் பார்த்தேன்; படித்துச் சுவைத்து மகிழ்ந்தேன். அது இந்தியாவில் எழுதப்பட்ட முதல் நவீனகம்; சுவையிலும் முதல் வரிசையில் இடம்பெறுவது. கேரள மொழியில் ஆங்கிலக் கல்வி நிறைந்த அறிஞரால் ஆக்கப்பட்டது. புல்மை மிக்க ஆங்கில நீதிபதியால் அவ் உலக மொழியில் உடனே மொழி பெயர்க்கப்பெற்றது. அதைப் பிழிந்து வடித்துத் தற்போது 'பொன்னி'யாரால் தமிழில் வினியோகிக்கப்பட்டுளது.

கலையும் அறிவும் எவருக்கும் தனி முழுதுரிமையில்லை. நல்லது எங்கு இருப்பினும் பங்குகொள்வதே அறிஞர் முறைமை. புது 'விருந்து' 'பொன்னி'யார் தருவதை அருந்துவதே அறிவுக்கு நல்ல மருந்தாகுமெனத் தோன்றுகிறது. அது தமிழுக்கு வளம் தருக. 'விருந்தின்' முயற்சி வளர்ந்து சிறந்திடுக. பொன்னிக் குழுவினரும் அவர் 'விருந்து' வியாபாரமும் உயர்ந்தோங்குக.

பசுமலை
25-8-51

இளசைகிழான்
ச. சோ. பாரதி

திடீரென்று நகைப்பொலியும் கேலிப் பேச்சும் நின்றுவிட்டதுபோலிருந்தது. ஆனந்திக்கு அப்பாடா என்றிருந்தது! நிலவிய அமைதியிலே ஒரே ஒரு குரல்மட்டும் கேட்டுக்கொண்டிருந்தது. யாரோ ஒருத்தி மட்டும் கேலி செய்கிறாள். நல்ல வேளை, ஒருத்தியோடு இந்தக் கேலி ஒழியட்டும்! அடடா, இதென்ன அவர் பேசியதை அப்படியே அவள் பேசுகிறாளே? என்ன அதிசயம். தன் கணவர் தன்னிடம் பேசியதைப்போலப் பேசித் தன்னைக் கேலிசெய்வர் என்று ஆனந்தி எதிர்பார்த்துத் தான் இருந்தாள். ஆனால் இப்படி வார்த்தைக்கு வார்த்தை, வாக்கியத்துக்கு வாக்கியம் மனப்பாடம் பண்ணியதுபோல் அவள் பேசித் தன் மானத்தை வாங்குகிறாளே? ஒருவேளை ஒட்டுக் கேட்டிருப்பாளோ?

பேசினது யார் என்றறிய ஆனந்தி ஒரு பார்வை பார்த்தாள் நாணத்தை விரட்டிவிட்டு. எல்லாத் தோழிகளும் ஒரு குறிப்பிட்ட திக்கில் நோக்கிக் கொண்டிருந்தனர். ஒருவர் உதடுகளாவது அசையவில்லை. ஒருவர் நாவும் பேசவில்லை! பின் யார் தன்னை இப்படிக் கேலிசெய்வது? தோழிகள் நோக்கின திக்கில் ஆனந்தி வளர்த்துவரும் ஆசைக்கிளி அறை ரகசியத்தை அம்பலத்துக்குக் கொண்டுவந்துகொண்டிருந்தது. ஐயையோ! இதையெல்லாம் யார் இப் பச்சைக்கிளிக்குச் சொல்லித்தந்தது? நான் இதனிடம் இதைப் பேசியதில்லையே? அவர் இதைக் கொஞ்சக்கூட மாட்டாரே? ஐயோ, மானம் பறிபோகிறதே! 'பளிச்' சென்று ஆனந்திக்கு ஒரு நினைவு வந்தது. ஆம். நேற்றுக் கலவியின்போது அது அறைசகுள் அல்லவா இருந்தது? என்ன தப்பு செய்துவிட்டோம், என்ன மடமை! அவர் பேசியதைக் கேட்டல்லவா இங்கு அது வெளுத்துவாங்குகிறது. "ஐயோ, கிளியே! பேசியது போதும்! போதும் நீ பேசி என்மானம் வாங்கியது!" என்று நாணம் தெரியாது பேசும் பைங்கிளியின் வாயைத் தன் கைகளால் புதைத்தாள் நாணம் தெரிந்து பேசாமடந்தையாகிவிட்ட, ஆனந்தி!

பரணி பாடப்போகும் சயங்கொண்டார், குலோத்துங்கன் புகழ் கேட்க எல்லோரையும் அழைக்கிறார். மூடியிருக்கும் கதவுகளைத் திறந்து கதைகேட்க வாருங்கள் என்கிறார். மூடின கதவுக்குள்ளே எத்தனை யெத்தனை உலகியலை அமைக்கிறார் அவர்! இப்பாடலின் சுவையைப் பற்றி நான் இனி எழுதவேண்டுமா? நீங்கள் தான் அனுபவித்துவிட்டீர்களே?

நேயக் கலவி மயக்கத்தே
நிகழ்ந்த மொழியைக் கிளியுரைப்ப
வாயைப் புதைக்கும் மடநல்லீர்
மணிப்பொற் கபாடம் திறமினோ.

—கலிங்கத்துப்பரணி.

[நேயம்—நேசம், மடநல்லீர்—இளமங்கையர் ; கபாடம்—கதவு]

ஆடும் மாடும்

டி.கே.சீனிவாசன்

நான்காம் அத்தியாயம்

சக்குவும் மோகனாவும் போன பிறகு சேகரனும் சோமுவும் வெகுநேரம் ஏதேதோ பேசிக் கொண்டிருந்தனர்.

கசப்பான உண்மைகளைத்தான் இதுவரை சேகரன் சோமுவிடமிருந்து கேட்டுப் பழக்கம். ஆனால் இன்று...? அவன் எதிர்பார்த்ததைப் போலவே அவன் விபரீதமாக முளைத்துவிட்டான். குடைசாய்ந்து குப்புறக் கவிழும் வண்டியால் உள்ளே இருப்பவர்களுக்கு ஆபத்து வந்துவிடக் கூடாதே என்றுதான் அஞ்சினான் சேகரன். அதுவும் நடந்துவிட்டது. யாரோ ஒருவர் நாடகக் கம்பெனி தொடங்கப் பணம் தருவதாகச் சொன்னாராம். அதற்கு ஈடு...? ஒரு நாளிரவுக்கு மோகனாவின் உடல்...!

“அவளுக்கும் புகழுக்கும் இடையில் ஒரே ஒரு படுக்கையறை!” என்றான் சோமு.

வெட்கமோ துக்கமோ துளிக் கூடத் தோன்றவில்லை, அவனுக்கு இதைச் சொன்னபோது. பழுத்துப் பக்குவமாயிருக்கும் கனியை ஆசையோடு பார்த்துக் கொண்டே பறிக்கச் செல்லுவதைப் போல...! அயர்ந்து போனான் சேகரன் இதைக் கேட்டு. சோமுவின் பேச்சில் வேடிக்கையோ வேதனையோ

ஏற்படுவதைத் தான் அவன் எதிர்பார்த்தான். ஆனால் இன்று ஏற்பட்ட வெறுப்பு.....நெளியும் புழுவொன்றைப் பார்ப்பதைப் போல அவனைப் பார்த்தான் சேகரன்.

"மனம் கொஞ்சங்கூடக் கூசவில்லையா உனக்கு இதைச் சொல்ல? சொந்த மாமன் மகளையா சோரஞ் செய்ய" அதற்கு மேல் பேசச் சேகரனுக்கு என்னவோ போல் இருந்தது.

"கூசத்தான் செய்கிறது, சேகர்! ஆனால் மண்ணில் நெளியும் புழுக்கள் மான அவமானத்தைப்பற்றிச் சிந்திப்பதில் அர்த்தம் என்ன இருக்கிறது? கண்ணியமாக அவைகள் வாழுகின்றனவே என்பதற்காக உலகம் அவைகளைக் கௌரவித்துவிடுகிறதா?"

விசித்திரமான வாதங்களை விபரீத உருவங்களில் கேட்டுக் கேட்டுப் பழகிவிட்டதால் சேகர் வாயடைத்துப் போய்விடவில்லை அப்போது.

"ஒழுக்கத்தைக் கைவிட்டா உயர்வைத் தேடவேண்டும்?" என்று துப்பினான் இந்தச் சொற்களை.

"ஆண்கள் உலகத்தில் ஒரு பெண் அவர்களோடு போட்டி போட்டுப் பெயரும் புகழும் அடைவது அவ்வளவு எளிதாயிருப்பதில்லை, சேகர்! உனக்குத் தெரியாது. சமூகத்தின் கேந்திர ஸ்தானங்களில் இருந்து

கொண்டு அதை இயக்குபவர்கள் எல்லாம் சண்டாளர்களும் சதிகாரர்களுமாகவே இருக்கிறார்கள் பெரும்பாலும்!”

சோமு இதைச் சொன்ன போது அதை எதற்காகச் சொன்னான் என்று விளங்காமல் தவித்தான் சேகரன். அவன் உள்ளத்தில் மோகனா மட்டுந்தான் இருந்தாள். அவள் அழகு...! அது அவன் மனதில் இல்லை — அவன் மனது அதில் மிதந்து மூழ்கி, நீந்தி விளையாடிக் கொண்டிருந்தது! அதில் ஒரு துளி கிடைத்தால் கூடப் போதும், தூரிகையின் உதவியால் அவலட்சணங்களையெல்லாம் அதிசுந்தரமாக்க அவனால் முடியும். அதனால்தான் அப்போது அவனுக்கு...கருத்திலே நிறைந்து ஒளிவிடும் அந்தப் பொருளில் களங்கம் படிவதென்றால்...? அவனால் சகிக்கவே முடியவில்லை. ஆள் நடமாட்டமேயில்லாத பாலைவனத்தில் அவனாகவே கற்பித்துக் கொண்ட பயத்தால் விரட்டப்பட்டுத் தலை தெறிக்க ஓடிக்கொண்டிருந்தான்.

வாயடைத்துப் போய் நிற்கும் தன் நண்பன் வாய்திறக்கப் பேச்சைத் தொடர்ந்தான் சோமு.

“உயர்ந்த பண்டங்கள் கூட விலைபோக வேண்டுமானால் விளம்பரம் தேவைப்படுகிறதே, சேகர்! பணத்துக்கு நான் எங்கே போவேன்? அதனால்தான்...” என்றான்.

“விவஸ்தையில்லாமல் பேசுகிறாய்! வெட்கம், மானம், சூடு, சொரணை இவற்றையெல்லாம் வீசியெறிந்து விட்டு மனிதனாக உலவுகிறாய்! இதயம் என்ற அந்தப் பொருளை உன்னிடம் இல்லாமலேயே போக்கடித்துக் கொண்டாய், சோமு!” துடிப்பால் துண்டுபட்டுச் சிதறின இந்தச் சொற்கள் சேகரனிடமிருந்து.

“இருந்தது ஒரு காலத்தில் அந்த இதயம் என்னிடத்திலும், சேகர்! அதனால் நான் பட்ட அவதியும் தொல்லையும்...! இரவு பகல் எந்நேரத்திலும் துன்ப

மும் துடிப்புமாகவே நிறைந்து என்னை உருக்கிக் காய்ச்சிவிட்டது, உபயோகமற்ற அந்தப் பொருள். பற்றியெரியத்தொடங்கும்போது சில மரங்களில் இருந்து எண்ணெய் கசியும் முதலில், பிறகு அந்த எண்ணெயே தீக்குத் தீனியாகி எரி நெருப்பை அதிகமாக்கும். அதே போலத்தான் இதயத்தைச் சூழ்நிலை கசக்கிப் பிழிந்தபோது ஏற்பட்ட வேதனையை, அதிலிருந்து வழிந்த மானம், மரியாதை, கௌரவம் என்ற உணர்ச்சிகள் அதிகப்படுத்தின. அதனால் என்ன விளைவு தெரியுமா? தாழ்ந்து போன என் தலைமேல், என்னைத் தாழ்த்திய உலகமே ஏறிச் சவாரி செய்ததுதான்! ஆகையால்தான் அதை வெளியில் எடுத்து வீசி எறிந்துவிட்டேன்.”


அவளுக்கும் புகழுக்கும் இடையில்...

கேட்டே இராத அந்தச் சொற்கள் சேகரனுக்குத் திகைப்பைத் தந்தன. மருட்சியோடு சோமுவையே பார்த்தான். சோமு பேசிக் கொண்டே போனான்.

“என்னைப்போல நீ இருந்ததில்லை. நாதியற்று நாடோடியாகத் திரிந்ததில்லை. அடுத்த வேளை உணவுக்கு யாரை அண்டுவது என்று தேடி அலைந்ததில்லை. இதெல்லாம் நடந்திருந்தால் இப்படியெல்லாம் பேசமாட்டாய் என்னிடத்தில். சோற்றுக்கில்லாது நான் அலையும் போது, ‘எவரையும் அண்டாதே. சொரணையோடு நடந்துகொள்’ என்றுதான் அந்த இதயம் கட்டளையிடும். ஆனால் அதற்கு வயிறு இடங்கொடுப்பதில்லையே! வயிறுதானப்பா வாழ்வின் அஸ்திவாரம்! அஸ்திவாரம் மண்ணுக்குள்ளே மறைந்து போவதால் கண்ணிருந்தும் கூடப் பலரால் கவனிக்க முடிவதில்லை அதை. கலையைப்பற்றிப் பேசுகிறார்கள். இலக்கியம் என்று என்னென்னவோ எழுதித் தொலைக்கிறார்கள். ஏழைக்குக் கலை, இலக்கியம், இசை, நாடகம் எல்லாம் இந்த வயிறுதான்! நவரசங்களையும் அவன் அதில் நடமாடக் காண்கிறான்!”

எல்லாமே ஒவ்வொன்றாக இடிந்து விழுந்து கொண்டிருப்பதை உணர்ந்தான் சேகர். எப்படி அதைத் தடுப்பது என்பதுதான் அவனுக்குப் புரியவில்லை. குழம்பியிருந்த மனநிலையோடு செயலற்றுச் சோமுவையே கவ

னித்தான். பேச்சை நிறுத்தாமல் தொடர்ந்தான் சோமு.

"இத்தனைப் பேச்சு எதற்கு? என்னிடம் இதயம் இருந்தால் என்ன, இல்லாமல் போனால் என்ன? உன்னை மட்டுமல்ல, இந்த உலகத்தையே கேட்கிறேன்! ஒரு கவள உணவுக்குக் கூட வழிவகுக்காத இந்த உலகத்துக்குநாங்கள் ஏன் கட்டுப்பட வேண்டும்? அது கற்பித்த உதவாக்கரைச் சட்டதிட்டங்களுக்குப் பயந்து வாழவேண்டும் என்று எந்த முகத்தோடு எங்களைக் கேட்கிறது? ஓட்டை உடைசலான ஒழுக்க வரம்புக்குள் நாங்கள் இருந்து தீரத்தான் வேண்டுமா? எல்லைகளையும் வரம்புகளையும் எங்களுக்கு வகுத்துக் கொடுக்கும் உலகத்துக்கு வாழ்வையும் அமைத்துக் கொடுக்கவேண்டும் என்ற புத்தி இல்லாமலேயே போய்விட்டதா? சொல், சேகர்!"

அணை உடைந்தது போல அலறியடித்துக்கொண்டு ஓடிவரும் இந்தக் கருத்தினைக் கொட்டினான் சோமு. அந்த வெள்ளத்தில் சிக்கிய துரும்பைப் போல அலைக்கழிக்கப்பட்டான் சேகர். ஆனாலும் சோமு ஓயவில்லை; பேசினான்.

"இதயம் என்னிடத்தில் இல்லை என்கிறாய். உன்னிடத்தில் மட்டும் இருக்கிறதோ? உணர்ச்சிகள் உறவாடும் இடம் தானே இதயம் என்பது? சிதறிக் கிடக்கும் அழகையெல்லாம் சேகரித்துத் தொகுத்துச் சித்திரங்களாகத் தீட்டும் உன்னையே கேட்கிறேன். உன்னிடத்தில் இதயம் இருக்கிறதா?"

அதற்குமேல் பொறுத்துக் கொண்டிருக்கச் சேகரால் முடியவில்லை.

"ஏன் இல்லை?" என்றான்.

"எங்கே இருக்கிறது? அழகை அனுபவிப்பதைத் தவிர வேறு எந்த உணர்ச்சிக்காவது நீ இதுவரையில் இடங் கொடுத்திருக்கிறாயா? அழகை விட அவதி தான் அதிகம் சேகர், இந்த உலகத்தில்! இன்னலையுந் தொல்லையையும் வடிகட்டி விட்டு எழிலை மட்டும் அனுபவிப்பது தான் இதயம் இருக்கிறது என்பதற்கு அடையாளமோ? காதலன் வரவைத் தேடிக் காத்திருக்கும்கன்னியின் முகத்தில் படிந்



அணை உடைந்தது போல...

திருக்கும் ஏக்க உணர்ச்சிகளை எடுத்துக் காட்டியிருக்கிறாய் உன் ஓவியங்களில். அதனால் சமூகத்துக்கு என்ன லாபம்? தென்படாத அந்தக் காதலனைச் சமூகம் தேடித் தரப்போகிறதா? ஆனால்...சேகர்! கஞ்சிக்கில்லாது வாடி வதங்கும் கண்ணுருவிக் காட்சிகளை உன் கலைத்திறன் படம் பிடித்திருந்தால்......! அதைப் பார்க்கும் பலருடைய மனம் நெகிழ்ந்து உதவியாவது செய்திருப்பார்களே! எங்கேயும் நிறைந்திருக்கும் அவதியை ஒதுக்கிவிட்டு எங்கெங்கோ சிதறிக் கிடக்கும் அழகை மட்டும் சேகரிப்பதுதான் இதயம் இருக்கிறது என்பதற்கு அடையாளமோ? மட்டரகமான சுயநலம், சேகர்! இது இதயம் படைத்தவர்கள் செய்யும் வேலை அல்ல!"

தன் உள்ளத்தை வெட்டித் துண்டாடிவிட்டு அந்த வேதனையையும்வேடிக்கையாக்கிச் சோமு அனுபவிப்பதைச் சேகரனால் பொறுக்க முடியவில்லை.

"ஆத்திரத்தால் அறிவை இழந்து பேசுகிறாய், சோமு! தெளிவோடு எதையும் சொல். அனைத்தையும் அழித்துவிட்டு எதை அமைக்கப்போகிறாய்?" என்று கேட்டான்.

"தூரிகையும் வர்ணமும் என்னிடத்தில் இல்லை, சேகர்! நீயே அவைகளை வைத்துக்கொண்டு என்னைச் சித்திரந் தீட்டச் சொல்லுகிறாய்!"

சிரித்தான் சோமு—திகைத்தான் சேகரன்!

"கலையைப் பிரசாரத்துக்குப் பயன்படுத்துவது அயோக்கியத்தனம்!"

"பிழைப்புக்கும் புகழுக்கும் கலை விபசாரியாக்கப்படுவதைவிட இந்தப் பிரச்சாரத்துக்குப் பயன்படுவது எத்தனையோ மடங்கு மேல்!" என்று சொல்லி இடித்துக் காட்டினான் சோமு.

இடி இடிக்கிறதே என்று வானத்தை நிமிர்ந்து பார்க்க, மின்னல், விழிகளைப் பறித்தெடுத்துப் போனால்...! அருவருப்பும் ஆத்திரமும் சம பங்குகளாக இருந்து சேகரன் உள்ளத்தில் ஒன்றையொன்று மிஞ்சப் போட்டி போட்டன. சமூகத்தைப் பிடித்துச் சோமுவை வெளியே தள்ள அவன் கரங்கள் துடித்தன. ஆனால்? அவன் மோகனாவின் அத்தை மகன்! கட்டிக்கொண்டிருக்கும் வேட்டியே அவனைக் காலிடறி விழச் செய்தது!

சோமு விடவில்லை.

"சேகர்! எனக்குத்தானே அவள் சொந்தம்? ஏற்படும் இழிவும் பழியும் எங்கள் இருவரையுந்தானே பாதிக்கும்? நீ எதற்காகக் கவலைப்படுகிறாய்? நான் உன்னுடைய நண்பன் என்பதற்காகவா?" என்று கேட்டான்.

"நீ நாசமாகப் போனாலும் எனக்குக் கவலையில்லை. ஆனால் கொட்டிக் குவிந்து கிடக்கும் அழகு படைத்த அவளைக் குட்டிச்சுவராக்குகிறாய். அது தான்..." என்றிழுத்தான் சேகர்.

"சீ! இதற்குத்தானு இவ்வளவு பேசினுய்? பைத்தியக்காரா! கொஞ்சுங் கிளியைத்தான் கூண்டிலே வைக்கவேண்டும் — தேவைப்படும்போது குலாவி மகிழ! இவள் வண்ணுத்திப் பூச்சி! பறக்கவிட்டு வேடிக்கை பார்த்தால்தான் பல்வர்ணச் சிறகுகளின் எழிலைப் பரிபூர்ணமாக அனுபவிக்க முடியும்!" என்ருன் சோமு வேடிக்கையாக.

கை காய்த்துப் போனுல் எதுவும் உறைக்காததுபோல, இதயமும் தீய்ந்துபோனுல் இழிவும் தோன்ருதோ என்று சந்தேகப் பட்டான் சேகர். அவனுக்கு எதுவுமே விளங்கவில்லை.

"கொஞ்ச நேரம் என்னை அமைதியாக இருக்கவிடு, சோமு. மனம் குழம்பிக் கிடக்கிறது" என்ருன்.

சோமுவும் அவனை விட்டுப் பிரிந்தான்.

வெறுப்போடு சுற்றிலும் அலைந்தன சேகரன் விழிகள். அந்தச் சித்திரங்கள்......செத்து ஜீவனற்ற உருவங்கள்! வர்ணக் கலப்பு...வெறி பிடித்தோர் சிலரால் வெட்டித் துண்டாடப்பட்ட மனிதனுடைய சிவந்த இரத்தம்! தூரிகை...ஒடிந்து போன உதவாக்கரை எலும்புத் துண்டு! மலர்ச்சோலை என்று எண்ணிக் கொண்டு இதுவரையில் மயானத்தில் இருந்திருக்கிருன்! ஏமாற்றிக்கொண்டானு அல்லது ஏமாற்றப்பட்டானு? இதுதான் புரியவில்லை அவனுக்கு.

கதவை இழுத்துப் பூட்டிவிட்டு நடந்தான் வெளியே.

●

மோசனுவை அழைத்துப் போன சக்கு அமைதியை இழந்ததோடு திருப்தியடைந்துவிடவில்லை; அவதியையும் புகுத்திக் கொண்டாள். இரவுதான் வாசு வந்தான் அவளைத் தேடி. அடக்கி வைத்திருந்த அழுகையை எல்லாம் அவன் முன்னுல் அப்படியே எடுத்துக் கொட்டினுள் சக்கு.

வாசு திகைத்துப் போனுன். அவன் அக்காள் அழுவதை அன்றுதான் முதல் தடவையாகப் பார்க்கிருன். அவன் விழிகளில் கூட நீர் துளிர்த்தது.

"ஏன் அக்கா அழுகிருய்? யாராவது செத்துப் போய்விட்டார்களா?"

எல்லோருக்கும் எழக்கூடிய சந்தேகந்தான். ஆனுல் அதற்குக் கிடைத்த பதில்...?

"நான்தான் செத்துப் போய் விட்டேன், வாசு!"

வேதனை வெடித்துச் சிதறியது அந்தச் சொற்களோடு. மேலே என்ன பேசுவது என்பது புரியாமல் திகைத்துப் போனுன் வாசு. வெகுநேரம் மௌனம் நிலவிற்று அங்கே. வெளியே யார் யாரோ போய்க் கொண்டிருந்தார்கள். பக்கத்து வீட்டு ரேடியோ பாடிக்கொண்

டிருந்தது. வீதியில் விளையாடிக் கொண்டிருந்த சிறுவர்கள் குதிப்பும் கும்மாளமுமாகக் கூத்தடித்துக்கொண்டிருந்தனர். எதிர் வீட்டில் ஒரு இளமங்கை தன் கணவனிடம் கேலியாகவதோ சொல்லிவிட்டுச் சிரித்தாள். வாசு இவற்றைக் கவனித்தான். சக்குவுக்கு அவைகளைக் காட்டினால் அவள் சஞ்சலம் மறைந்து போகுமே எனக்கூட நினைத்தான். ஆனால் ஒருவேளை அது வளர்ந்தால்...? நேரத்தால் நிம்மதி அதிகமானதா அல்லது நிம்மதியால் நேரம் அதிகமாகிறதா? இருவருக்குமே புரியவில்லை இந்தக் கேள்விகளுக்குப் பதில்!



'இவள் வண்ணத்திப்பூச்சி!'

திடீரென எதையோ நினைத்துக்கொண்ட சக்கு, "வாசு! நான் அழகா யிருக்கிறேனா?" என்றாள்.

இவளுக்கு என்ன நேர்ந்துவிட்டது என்ற எண்ணத்தின் பிரதிபலிப்பு வாசுவின் விழிகளில் காணப்பட்டது. சக்குவின் அழகைப்பற்றி அவன் நினைத்துப் பார்த்ததுகூடக் கிடையாது. அவனுடைய வயதில் அதற்குத் தேவையான தகுதியோ திறமையோ இருக்க வேண்டிய நியாயமே இல்லை!

மேலும் உள்ளத்தையே நேரிடையாகப் புரிந்துகொண்ட பிறகு உடலைப்பற்றிக் கவலைப்படவேண்டிய தேவை என்ன இருக்கிறது? பிறகு எப்படி அந்தக் கேள்வியைச் சக்கு இவனிடம்.........? ஏதோ ஒரு கஷ்டம் ஏற்பட்டுவிட்டது தன் அக்காளுக்கு என்பது மட்டுந்தான் தெரிந்தது அவனுக்கு. அதனால்தான் அவன் கலக்கமும் குழப்பமுமாக......

"அழகாகத்தானே இருக்கிறாய், அக்கா!" என்றான்.

அதற்குமேல் என்ன கேட்பது என்று தெரியவில்லை சக்குவுக்கு. விஷயம் முழுவதையுமே சொல்லிவிட்டால் என்ன என்று எண்ணத் தொடங்கினாள்.

"அத்தானுக்கு மத்தியானம் நான்தான் சாப்பாடு கொண்டு போனேன், வாசு!" என்றாள்.

எல்லாம் விளங்கிவிட்டது வாசுவுக்கு! அவன் மத்தியானம் வராததுதான் அத்தனை அழுகைக்கும் ஆத்திரத்துக்கும் காரணம்!

"இந்தத் தடவை மட்டும் மன்னித்துக்கொள், அக்கா. மறந்தே போனேன். இனிமேல் அப்படி நடக்கவே நடக்காது" என்றான் வாசு.

"இல்லே வாசு, உண்மையாகவே நான்தான் கொண்டு போனேன்" என்று அழுத்தந் திருத்தமாகச் சொன்னதையே திரும்பச் சொன்னுள் சக்கு.

"பொய்! நீயா தெருவில் போனுய்? பரிகாசம் செய்யாதே அக்கா! இனிமேல் அந்தமாதிரி நடக்கவே நடக்காது, ஆணையிட்டுச் சொல்லுகிறேன்" என்று கெஞ்சிக் கேட்டுக்கொண்டான் வாசு.

அதற்குமேல் சக்குவால் ஒன்றுமே சொல்ல முடியவில்லே. நம்ப வைப்பதே கடினமாக இருக்கும்போது விளங்க வைப்பது...! மௌனமாகவே இருந்து விட்டாள்.

தன் அக்காள் தன்னே மன்னிக்க மறுக்கிறுள் என்று நினேத்தான் வாசு. 'அவ்வளவு பெரிய குற்றமா அது' என்று அவன் நினேத்தபோது, ஆத்திரம் கூட ஏற்பட்டது அவனுக்கு அவள் மேல். ஆனல், அவள் மறுபடியும் அழத் தொடங்கிவிட்டால்...? மௌனமாகவே சகித்துக்கொண்டான்.

"வாசு! நீ போய் அத்தான் வந்துவிட்டாரா என்று பார்த்து விட்டு வா. சாப்பாடு கொண்டு போக வேண்டும்" என்முள் சக்கு.

"சரி அக்கா" என்று சொல்லிக்கொண்டே போனுன் வாசு. வானத்தில் வட்டமிடும் பட்டத்தை அதைக் கீழேயிருந்து இயக்கும் பையன் ஆசையோடு கவனிப்பதைப் போல, மறையும் வரை அவனேயே பார்த்து விட்டுத் திரும்பினுள் சக்கு. எதிரே மோகனு நின்று கொண்டிருந்தாள்.

விளக்கொளியில் அவள் விழிகளிலும் நீர் துளிர்த்திருப்பது தெரிந்தது. தன்னேயே பரிதாபமாக அவள் பார்ப்பதை, ஒரு வேளே பரிகாசம் செய்கிறுளோ என நினேத்தாள் சக்கு. உடனே ஓடினுள் சமையலறைக்குள்.

"அக்கா! அத்தான் இங்கேயே சாப்பிட வந்துவிடுவதாகச் சொல்லுகிருர்" என்று சொல்லிக்கொண்டே உள்ளே நுழைந்தான் வாசு.

எரிச்சல் தாங்க முடியாமல் வெந்து போனுள் சக்கு.

"வேண்டாம். வாசு! வர வேண்டாம் என்று சொல். நீயே சாப்பாடு கொண்டுபோ. அதற்குள் வந்துவிடப் போகிருர்; ஓடு. உடனே போய்ச் சொல்" என்முள் சக்கு.

ஏன் இத்தனே படபடப்பும் துடிதுடிப்பும் அவள் பேச்சில் காணப்படுகின்றன எனக் கேட்க நினேத்தான் வாசு. ஆனுலும், எதுவும் பேசாமலே அங்கிருந்து போனுன்.

பாத்திரத்தில் உணவை எடுத்து வைத்தபோது என்னற்ற உணர்ச்சிகள் சக்குவின் இதயத்தில் போராடின. அவள் எதிர்காலம் கண் முன்னுலேயே எரிந்து நாசமாவதை அவள் உணர்ந்தாள். இருந்தாலும் மன உணர்ச்சிகளேக் கட்டுப்படுத்த

வேண்டிய நிர்ப்பந்தம் ஏற்பட்டு விட்டது அவளுக்கு. மோகனுவை வெளியே துரத்திவிட்டால்......? நல்ல முடிவுதான் அது! ஆனுல், அதனுல் ஏதாவது விபரீதம் விளைந்து... அவள் கழுத்தில் இன்னும் கயிறு ஏறவில்லை. கையெழுத்துப் போடப்படாத பத்திரந்தான் சேகர் அவளுக்கு! எப்படி அவனை அவள் கட்டுப்படுத்த முடியும்? ஆனுல்...? அவனை அவன் உதறித் தள்ளிவிட்டால்...? சிறு வயதிலேயே அவன் பெயரை முத்திரை போட்டுவிட்டார்கள் இவள் வாழ்வில். அழிக்காமலே வளர்ந்தும் விட்டது. இனி அதை அழித்தெழுதக் காணிக்கை ஏதும் கொட்டியளக்காமல் எந்த ஆணுக்கும் துணிவேற்படுத்த முடியாது! எதிரே சுவரில் பூசப்பட்ட மண்ணுக்கும் அந்தப் பெண்ணுக்கும் என்ன வேற்றுமை என்பதை அவளாலேயே கண்டு பிடிக்க முடியாமல் போனது.

"அவரே வந்துவிட்டார், சக்கு!" என்றுசொல்லிக் கொண்டே உள்ளே நுழைந்தாள் மோகனு.

"ஐயோ! வந்துவிட்டாரா?" என்று அலறிக் கொண்டே நிமிர்ந்தாள் சக்கு.

கலங்கியிருந்த அவள் கண்களில் நீர் வழியத் தொடங்கி விட்டது. மோகனு இதைப் புரிந்து கொண்டாள். சேகரன் தன்னை வலையாக நினைக்கிருன் என்ற எண்ணத்தால் அந்தப் பெண் இவளை அம்பாக மதிக்கிருள் என்பது அவளுக்குத் தெரிந்து போனது. ஆனுலும் சோகத்தை அதிகமாக்க அவள் விரும்பவில்லை.

"மாமன் மகளை அத்தை மகன் தேடிவந்தால் அதில் சந்தோஷமல்லவா அடையவேண்டும்? அழுவதா? பைத்தியமே!" என்ருள் ஆறுதலுக்காக.

அந்தக் கேள்விக்குப் பதில் சக்குவின் மனதில் இருந்தது. ஆனுல் அதை அவளிடமே எப்படிச் சொல்லுவது? அதைச் சொல்லா விட்டால்......வேதனையை வெளிப்படுத்தவோ அல்லது கட்டுப்படுத்தவோ முடியாமல் போகும். எழுந்த ஒவ்வொரு எண்ணமும் துளிர்க்கும் போதேகருகின, சக்குவின் இதயத்தில். ஒன்றையாவது உருவாக வெளிக்குக் கொண்டுவர முடியாமல் தவித்தே போனுள்.

"என்னை மோசம் செய்துவிடாதே, அக்கா?" என்று மோகனுவின் கால்களை இறு



கையெழுத்துப் போடாத பத்திரம்...

கப் பிடித்துக்கொண்டாள் உடனே.

ஓடோடிவந்த காற்று ஒன்று எரிந்து கொண்டிருந்த விளக்கை அணைத்து விட்டது. ஆனால், அடுப்புக்கு வெளியே நீட்டிக் கொண்டிருந்த விறகு, பற்றி யெரியத் தொடங்கியதால் வெளிச்சம் மட்டும் இருந்தது. புகைச்சுருள்கள் கலைந்தழிந்து கண்டபக்கம் சிதறிச் சிதைந் தோடின. சக்குவைத் தன்னோடு சேர்த்தணைத்துக் கொண்டாள் மோகனா. மனித உலகம் உண் மையாகவே அங்கே இருந்ததை அவர்கள் இருவருமே உணர்ந் தார்கள்.

சிறிது நேரங்கழித்து மோகனா, "போ, சக்கு. போய் அவருக்குச் சாப்பாடு போடு" என்றாள்.

மோகனாவின் முகத்தையே கூர்ந்து கவனித்தாள் சக்கு. ஒளிவு மறைவு இல்லாமல் அது தன் உண்மை நிலையையே காட் டிற்று. ஆனாலும் சக்குவின் உள்ளம்......

"நானும் உன்னைப்போல ஒரு பெண்தான், சக்கு" என்றாள் மோகனா.

திடுக்கிட்டாள் சக்கு. ஆனா லும்...

"அதற்கில்லை, அக்கா! நானா போவது?" என்றாள் சக்கு செல்லமாக.

"போ, பைத்தியமே! நீ பார்த்தே அறியாத உருவமா உன் அத்தான்?" என்றாள் மோகனா.

அப்போது அவளுக்கு ஏற் பட்டது வேதனையா அல்லது வெட்கமா என்று புரியவில்லை சக்குவுக்கு.

வீட்டிலேயே அச்சடிக்கும் பாக்கட் பிரஸ்

பெயர், முகவரி, காகித லேபில்கள், ஹாண்டு பில்கள், நிகழ்ச்சிப் பத்திரங்கள் முத லியனவற்றை ஷெ பிரஸில் நேர்த்தியாக அச்சடிக்கலாம். ஒவ்வொரு வீட்டுக்கும் இன்றியமையாதது.

நெ. 1. ரூ. 2-0-0 நெ. 2. ரூ. 2-8-0 ஸ்பெஷல் ரூ. 3-0-0 சிறந்த ரகம் ரூ. 3-8-0 பெரிய அளவு உயர்ந்தரகம் ரூ. 6-0-0 தபால் பாக்கிங் செலவு அணா 15.

உயர்ரகக் கைக்கெடிகாரங்கள்

ஸ்விஸ் தயாரிப்பு 12 ௵ உத்தரவாதம் 5 ஜூவல் குரோமியம் கேஸ் வட்ட ஷேப் ரூ. 16—8—0 சிறந்தது ரூ. 17-8-0 நீண்ட சதுர குரோமியம் கேஸ் 7 ஜூவல் ரூ. 21-0-0. ரோல்டு கோல்டு 15 ௵ உத்தரவாதம் 9 ஜூவல் ரூ. 25-0-0. சிறந்தது ரூ. 27-0-0 ஸ்பெஷல் 15 ஜூவல் ரூ. 26-0-0. செண்டர் செகண்ட் ரூ. 19-0-0. பாக்கட் வாட்ச் ரூ. 12-0-0. அலாரம் டைம்பீஸ் ரூ. 17-0-0. சிறந் தது ரூ. 19-0-0 தபால் செலவு ரூ. 1-4-0.

GREAT NATIONAL STORES

(P. P.) POST BOX NO. 12216.

CALCUTTA (5)

நமக்குள்ளே

சுகி

4

"முன்னாளில் பிறருக்கு உதவுவது இயல்பாக இருந்தது. இப்போது தன்னலம், சுயநலம் என்பதைத் தவிர மக்களிடையே வேறு ஒரு மண்ணாங்கட்டியையும் காணோம்" என்று ஒரு பெரியவர் சொன்னார். இவர் இரண்டு மாபெரும் யுத்தங்களையும் கண்டவர். மக்கள் மனம் திடீரென ஏன் இப்படி மனிதத்தன்மையை விட்டுத் தடம்விலகிப்போய் விட்டதென ஆச்சரியப்பட்டார்.

இந்நாளில், அதிகமாக உழைக்க நேரிடுகிறது; அப்படியும் மிச்சமில்லை; முன்னாட்களில் உழைப்புக்கு அதிகநேரம் வேண்டாம்; வாழ்வில் மிச்சம் இருந்தது; பணத்தில் மிச்சம்; வாழ்நாளில் மிச்சம்; முன்னாளில் என்ன செலவு செய்தாலும் பணம் கையை விட்டுப் போகாமல் அட்டைபோல ஒட்டிக்கொண்டது; இப்போது ஐஸ்கட்டிபோல இருந்த இடம் தெரியாமல் பம்மிவிடுகிறது. இந்தப் பணம் இருக்கிறதே, இதுதான் வாழ்க்கையில் திருப்தியும் அதிருப்தியும் தருகிறதா?

யுத்த காலத்திலே, பீதி மனிதர்களைக் கழுத்தைப் பிடித்துத் தள்ளியபோதுகூட அதிருப்தியின்றி வாழ்ந்தோம்; சிரித்தோம்; சிங்காரித்தோம். இப்போது சிரிப்புக்குப் பதில், வீட்டுக்கு வீடு அழுகை; மயான காண்டம். 'உச்சிமீது வானிடிந்துவீழ்கின்ற போதிலும், அச்சமில்லை, அச்சமில்லை, அச்சமில்லை' யென்ற நாம் இப்போது ஏன் கலவரம் அடைகிறோம்?

நமக்குள் வந்து புகுந்த சனியன் எது? அரசியல், சமுதாயம், மொழி எத்துறையிலும் நம்பிக்கையை இழந்துவருகிறார்கள். மாற்றங்கள் உணவுமுதல் உல்லாசம் வரை புகுந்துகொண்டன. அன்பு, காருண்யம், இரக்கச் சித்தம் என்பனவெல்லாம் ஏட்டுச் சொற்களாய் போய்விட்டன. வாழ்க்கையைப்பற்றிய எண்ணங்கள் பலருக்கும் ஒன்றுபோலிருக்கின்றன. எல்லோரும் முதலாளிகள் ஆகவேண்டும்; எல்லோரும் பணத்தின் ஆதிக்கத்தை விட்டுப் பணத்தைச்சர்வாதிகாரம் செய்ய வேண்டும். உழைக்காமலே திடீரெனப் பணத்தையடைய வேண்டும் என்ற ஆசை பிறந்து விட்டது. உழைப்பைவிடச் சுருக்கு வழியில் பணத்தையடைய வேண்டுமென்ற சபலங்களுக்கு

நாட்டில் நிறையச் சாதனங்களும் இருக்கின்றன. அவை சாதனங்களா? சவக்குழிகளா?

* * *

மனிதனிடமிருந்த வீரஉணர்ச்சி, வாழ்வில் நம்பிக்கை, வருங்கால மக்களுக்குச் சேவை என்ற உணர்ச்சிகள் வர வர வளர்வதே மக்கள் வளர்ச்சிக்குத் தூண்டுகோல்.

* * *

நான் அரசியல் பேசவில்லை; சமூக இயல் பேசவில்லை. இரண்டும் எனக்குத்தெரியாது; ஆனால் குடும்ப இயல் அமைதியாக நாட்டில் இருந்தால், அங்கே அரசியலும் சமூக இயலும் உயர்வாக இருக்கும். வரப்புயர......என்ற ஔவையார் வாக்குப்போல வீட்டுக்குள் பசியும் பட்டினியும் இருக்கும் நாட்டில், தியாகங்களையும் பிரமாத உற்பத்திகளையும் எதிர்பார்க்க முடியாது. தனி மனிதர்களுக்கு அவரவர்கள் சக்திக்கும், வேலைத்திறமைக்கும் நாட்டில் சந்தர்ப்பங்கள் ஏற்பட்டுக்கொண்டே இருக்கவேண்டும். சந்தர்ப்பங்கள் நேரிடுவதைத் தடுத்தாலும், நேரிடாமல் போனாலும், மனிதர்கள் வேதாந்திகளாக முன்னாளில் மாறினார்கள்; இப்போது முசுடுகளாய் ஆகிறார்கள். விரக்தி மனப்பான்மை இளந் தம்பதிகளைக்கூட இந்த நாட்டில் பிடித்துக் கொண்டிருக்கிறது. உத்தியோகம் பார்க்கவந்த நாலாவதுமாதம் வேலையிலிருந்து ஓய்வுபெற விரும்புகிறார்கள்.

ஐஸ்கட்டியைப்போல் பம்மிவிடுகிறது

உழைப்புக்கும் ஊணுக்கும் சம்பந்தமில்லாமல் போய்விடவே, உண்பதும் உறங்குவதும் போன்ற மகா புனிதமான காரியங்கள் கூடக் கூலிக்கு மாரடிப் பாகத் தோன்றுகின்றன.

ஏன் இந்தத் தேக்கம்? ஏன் இந்தத் துறவறநிலை? வாழப் பிறந்தோம் என்ற ஊக்கம் வற்றிச் செத்துவிட்டதன் மர்மம் என்ன?

* * *

இக்காலத்திய வாழ்வு எவ்வளவு போலி என்பது மோட்டார்களின் மாடலைப் பார்த்து அறியலாம். பகட்டும் பளபளப்பும் இருக்கிறதே தவிர, உறுதி, நீடித்த ஆயுள் இல்லாத தகரடப்பாக்களே அத்தனையும்.

* * *

நான் சிறுபிள்ளையாக இருந்த காலத்தில் காருக்குள் இருப்பதை விட அதன்பின் ஓடுவதை மிகவும் ரசித்தேன்; பிறகு

விரக்தி மனப்பான்மை......

காரைத் தள்ளுவதில் குஷி இருந்தது. அந்த நாள் மாட்டார்களின் வேகமும், உருவமும் அவ்வளவு அருவருப்பானவை. ஜாதிக் குதிரைகள் மோட்டாரை முந்திக்கொண்டு பறந்துவிடும். இப்போது வந்த கார்களைப் பார்க்கும்போது, இப்படி நமக்கு ஏன் ஒரு கார் இருக்கக்கூடாது ?— இப்படி நான்மட்டுமா நினைக்கிறேன் ? எல்லோரும் நினைக்கிறோம். மோட்டாரின் அழகு அவ்வளவு பிரமாண்டமாக முன்னுக்கு வந்திருக்கிறது ; முன்பக்கம் எது பின்பக்கம் எது என்று தெரியாத 'இருதலை மணியன்' பாம்புபோல வந்திருக்கிறது !

நாளது வரை நான் கார் இல்லாமல் இருக்கிறேன் ; என்றால் சாப்பிட முடிகிறது ; ஜீரணம் செய்ய முடிகிறது ; நான் சந்தோஷமாகவே இருக்கிறேன். கார் இருந்தால்தான் வாழ்க்கை ; இல்லாவிட்டால் நாம் செத்தவர்கள் என்று நினைப்பவர்கள் கூட்டமும் நம்மிடையே இருக்கிறது ; ஆனால் கார் வைத்திருப்பவர்கள் தாம் பிறரைக் கொல்லுகிறார்கள் என்பதைவிட, இல்லாதவர்கள் தங்களையே கொன்று கொள்ளுகிறார்கள் என்று சொல்லலாம். காரில்லையே என்று ஏக்கம் பிடித்துச் சாகிறவர்கள் எத்தனையோ பேர் ; அது மட்டுமல்ல. இன்னும் எத்தனையோ பொருள்கள்மீது ஏக்கம் பிடித்து அலைபவர்கள் அநேகர்.

தலை சிங்காரித்துக்கொள்ளப் பத்துமைல் போவார்கள். குறிப்பிட்ட நபரிடம் சட்டையைத் தைத்து வாங்க வருஷம் இரண்டானாலும் அப்படியே செய்வார்கள் ; தங்களுக்குப் பிடித்தமான பதார்த்தங்களைத்தேடி மைல் கணக்காகப் போய்ச் சாப்பிடுவார்கள். இவை இல்லாமல் போனால், வாழ்வே கசந்துவிட்டதாக எண்ணம். இதற்காகத் துறவிபோல வாழ வேண்டுமென்று நான் சொல்லவும் இல்லை; சொல்லவும்கூடாது. நாம் ஆசைகளையும் அனுபவங்களையும் ருசி பார்க்கவே பிறந்திருக்கிறோம். இல்லாதனவற்றுக்கு ஏங்கி, இருப்பதை மறக்கக்கூடாது என்பதே என் வேண்டுகோள்.

பட்டிலும் பட்டாடையிலும் பகட்டு இருக்கிறது ; அழகும் ஒயிலும் குடிகொண்டிருக்கிறது. கிழிந்த சட்டைத் துணிமணிகளைவிட, புதிய துணிமணிகளுக்கு எடுப்பான தோற்றம்

இருக்கிறது. வாடல் கத்தரிக்காயைவிட இளம் பிஞ்சிலே ருசி கொப்பளிப்பதை அறிவோம். பட்டாடை அணிந்து பட்டாம்பூச்சிபோல வருகிற பெண்ணின் குரல், மழைக் காலத்து மயில் அகவுவதைப் போலிருந்தால் அப்போது அது பெண்ணா? குரல்மட்டும் தேனாக இருந்து, புத்திசாலித்தனம் இல்லாதுபோனால் அங்கே ரஸனை உண்டா? நறுஞ் சந்தனமும், துளிர் வெற்றிலையும் மனதிற்கும் நாவுக்கும் இனிமையாக இருக்கிறவை; அவை வாயாடிகள் கூட்டத்திற்குள் இருந்தால் எங்கே ருசியாக இருக்கும்? காப்பியின் சுகந்த மணம் கம்மென்று மூக்கைத் துளைத்தாலும், அருகே 'பசிக்குது ஐயா, நாலுநாள் பட்டினி' என்ற கூக்குரல் இருந்தால் அதில் ருசியுண்டா? பசியோடிருப்பவனைப் பார்க்க வைத்துக்கொண்டு தீவனத்தைத் தின்பதும் உழைப்பவனுக்குக் கூலி கிடையாமல் நடைப்பிணமாகப் போகும் நிலையில் அவன் மூஞ்சியில் மோட்டார் சேற்றை அள்ளி வீசுவதும் ஒன்றுதான்.

என்னிடம் மோட்டார் இல்லாத காரணத்தால் இப்படிப் பணத்தை வைவதாக நினைக்க வேண்டாம். மோட்டாரைவிட அற்புதமான பொருள் என்னிடம்—நம்மிடம் இருப்பதால் நாம் மனிதராக வாழ்கிறோம்.

கந்தை கிழிந்திருந்தாலும் நமது சிந்தையில் கிழிசல்



மோட்டாரை முந்திக்கொண்டு

இல்லை; பட்டாடை உடுத்தியவர்களை விடப் பளபளக்கும் கார்க்காரர்களைவிட மெல்லிய உள்ளமும், வேகம் நிறைந்த பண்பும் நம்மிடம் இருக்கின்றன. மணிக்கு நூற்றிருபது மைல் வேகத்தில் போகக்கூடிய மோட்டார் நம்மிடம் இல்லை; ஆனால் நூற்றிருபது லட்சம் மைல் வேகம் இழுத்துச் செல்லும் பாரதிதாசன் கவிதைகளை வைத்திருக்கிறோம். உணவு நெருக்கடியில் ஒரு வீட்டில் சோறு இல்லாமலே இருந்தாலும், அங்கே ஹாஸ்யமும், சகிப்புத் தன்மையும் விரவியிருந்தால் வாழ்வு சொர்க்கமாக இருக்கும். அரிசியின் பற்றாக்குறையை அறிவுடைமை நிறைந்த நூல்களில் கண்டு பசியாறலாம். காலுக்குச் செருப்பில்லாமல் போவது எனது அந்தஸ்துக்குக் குறைவுஎன்று சமூகத்தில்நினைக்கிறார்கள்; ஆனால் எனக்கு மனச்சாட்சி இருக்கவேண்டுமென

'முழத்துணி தவிர வேறு துணி இல்லை'

நான் நினைக்கிறேன். பெண்ணுக்கு மஞ்சளும், மைச் சாந்தும் அழகு செய்வதை விடக் கல்வி அதிக அழகைச் செய்யக் கூடும்.

* * *

வாழ்க்கை சிந்திப்பவனுக்குத் தமாஷ்; அதை உணர்பவனுக்கோ துன்பப் படுகுழி.

* * *

பொருள்களை, மோட்டார், யந்திரம், அழகுச் சாதனம் இவைகளை ஒருஇடத்திலிருந்து இறக்குமதி செய்யலாம். ஆனால் வாழ்க்கை நலனுக்கு இன்ப சாதனங்களே துணை செய்வதாக எண்ணி விடக்கூடாது; மனிதப் பண்பு இறக்குமதி செய்யக்கூடிய பொருளல்ல; மனித உருவமாக நாம் வாழ்ந்து வந்தாலும் மனித குணத்தோடு வாழ்வதற்கு, மோட்டாரும், நாகரிக சாதனங்களும் துணை நிற்க முடியாது. பணத்திற்குள்ள மாயா சக்தி வளர வளர, மனிதப் பண்பே மறந்துவிடுகிறது. லட்சத்தில் ஒருவர் தான் பணம் வளர்ந்தாலும், மனிதனாக வாழ முடிகிறது. பணத்தில் புரளுகிறவர்கள் எல்லோரும் சௌக்கியமாக இருப்பதாக எண்ணி விடுவது தவறு. சிரித்துச் சமாளிக்கும் மனப்பான்மை, சிந்திக்கும் திறன் இருந்தால் அவனிடம் மோட்டார்கள் இல்லாது போனாலும் அவன் மனம் ஓய்ந்து விடமாட்டான்.

இருப்பவர்களைப் பார்த்துப் பொறாமைப்பட்டு, என் ஏழ்மையை நான் நொந்துகொள்ளவில்லை; நாட்டின் சீர்கேடான நிலையை எண்ணிச் சிரிக்கிறேன். ஷா சொன்னாரே, "யார் யார் மனிதனாக வாழக்கூடாதோ அவர்கள் எல்லாம் வியாதியிலிருந்தும், கஷ்டங்களிலிருந்தும் பணத்தினாலே பிழைத்துக் கொள்ளுகிறார்கள்; யார் யார் வாழவேண்டுமோ அவர்கள் சாகிறார்கள்" இது உலகத்திற்காகச் சொன்ன சொல். எனக்கும், உங்களுக்கும் சொன்ன சொல்.

* * *

பணம் வாழ்க்கை வசதிக்கு ஓர் எல்லை; மனப்பாங்குதான் வாழ்வின் ஆணிவேர்; சந்தோஷத்தை விலைக்கு வாங்கிவிடுவதற்குப்பதில் பணம் துன்பத்தை வாங்கினாலும் வாங்கிவிடும்.

* * *

தூக்கமின்றி மாத்திரை விழுங்கும் லட்சாதிபதியை விட, நினைத்தவுடன் தூங்கும் உழைப்பாளியைப் பார்த்து நான் பெருமைப்படுகிறேன். பணத்திற்குள்ள ஒரேவசதி, அது வறுமை



யைப் போக்குகிறது; வாழ்வில் இன்பம் தருகிறது என்று பூரணமாகச் சொல்ல முடியாது. பதினாயிரம் ஏக்கர் பூமியுள்ளவன் ஒருவேளைக்குப் பத்துப்படி உணவைச் சாப்பிட முடியுமா? முடியாது. ஆனால், அவன் தன்னை வியாதியிலிருந்து காப்பாற்றிக்கொள்ளப் பாடுபடலாம்; ஏழைக்கு எதிரி, முதல் எமன் வறுமை; பிறகு வியாதி; ஆனால் வியாதியற்ற ஏழையின் மகிழ்ச்சியைப் பதினாயிரம் ரூபாய் மோட்டாரில் போகிறவன் அனுபவிக்கவே முடியாது. மனமகிழ்ச்சி பொறுமைக்கு அப்பாற்பட்டது.

கதை தெரிந்திருக்கலாம். ராஜா "உலகில் எவன் சந்தோஷமாக இருக்கிறானோ அவனுடைய சட்டையை வாங்கி வா" என்று கட்டளையிட்டார். அந்த ராஜ்யம் முழுவதும் இந்த 1951 ம் வருஷம் போல இருந்தது. எல்லோரும் கவலையும் பீதியும் சுயநலமும் உடையவர்களாக இருந்தார்கள். ஒருவன் மட்டும் ஆனந்தமாக இருந்தான். ராஜாவுக்குச் சேதி போயிற்று. அவனிடமுள்ள சட்டையை ராஜா இரவல் கேட்டார், அவன் "என்னிடம் உடுத்திய முழத்துணி தவிர, வேறு துணி இல்லை" என்றானாம். எப்படிப்பட்ட இடத்தில் இன்பம்! ஏழ்மையில், உடைமையற்ற இடத்தில் இன்பம்!

பொன்னும் பொருளும் இன்பங்களைத் தந்துவிடா. மனம் திருப்தியடையவேண்டும்; அந்த நிலையே மனித நிலை. ஆனால் உரிமையை மறந்து சோழையாக இருப்பவனும் மனிதனல்ல என்பதை நாம் அறிவோம். வள்ளுவர் வகுத்தமாதிரி, பொருளியல், அரசியல் இரண்டுக்கும் அப்பால் இல்லறவியல்! மீண்டும் குடும்பத்திற்குள் வந்துவிட்டோம்.

ஒவ்வொரு குடும்பமும் இனிதாக வாழும் நாளே ஒரு நாடு இனிதாக வாழும் நாள்!

* * *

நம் வாழ்வுக்குத் துணைசெய்யும் மிருகங்களுக்கும் யந்திரங்களுக்கும் ஒரே வேறுபாடு! யந்திரங்கள் ஓடினால் நமக்குச் செலவு; மிருகங்களோ நின்றால் செலவு.

பேய்

வேலைவில்லவன்

டாக்டரும், குடியானவனும் ஒருவர் முகத்தை யொருவர் பார்த்தபடி நின்று கொண்டிருந்தார்கள். அருகிலிருந்த கட்டிலில் படுத்துச் செத்துக் கொண்டிருந்த கிழவி — அந்தக் குடியானவனின் தாய் — அவர்களிருவரையும் பார்த்தவாறே அவர்கள் உரையாடலைக் கேட்டுக் கொண்டிருந்தாள். அவள் இந்த உலகில் நீண்டகாலம் வாழ்ந்து விட்டாள். அவளுக்கு வயது தொண்ணூற்றிரண்டு. தான் சாகப்போகிறோம் என்ற ஒரே உணர்ச்சி மட்டும்தான் அப்போது அவளிடம் இருந்தது.

கதிரவன் ஒளிக்கற்றைகள் திறந்திருந்த கதவு சன்னல்களின் வழியாக அந்தச் சிறுவீட்டின் மண் தளத்தின்மீது பாய்ந்து கொண்டிருந்தன. அப்பொழுது அங்கு வீசிய வெப்பக்காற்று தன்னுடன் காய்ந்து கருகிய புல், பூண்டு, சருகு, தானியம் முதலியவைகளை அள்ளிக்கொண்டு வந்தது. வயல் வெளிகளில் வழக்கமான கூச்சல் எழும்பிக் கொண்டிருந்தது.

"ஹொனோர்!... நீ உன் தாயை இந்த நிலையில் விட்டுவிட்டு வெளியே செல்லக்கூடாது. அவள் உயிர் இப்போதோ, பிறகோ என்ற நிலையில் இருக்கிறது..." டாக்டரின் குரலில் அழுத்தம் இருந்தது.

"கோதுமை தானியங்களை வீட்டினுள் கொண்டு வந்து சேர்க்க வேண்டுமே!... ம்... இது தானே அதற்கேற்ற வேளை!... அம்மா! நீ என்ன சொல்லுகிறாய்?..." ஹொனோர் பரிவுடன் பேசினான்.

சாவின் சன்னிதானத்தை நெருங்கிக் கொண்டிருந்த அந்தக் கிழவி, "சரி" என்று கூறும் வகையில் தன் தலையை அசைத்தாள்.

டாக்டர் வேதனையோடு அடியெடுத்து வைத்தார்.

"நீ ஒரு மிருகம்! உன்னை நான் அந்தக் காரியங்களிலெல்லாம் இப்பொழுது ஈடுபட விடமாட்டேன். உனக்கு அந்த வேலை மிகவும் முக்கியமாயிருந்தால் அந்தக் கிழட்டுநர்ஸை அழைத்து வந்து உன் தாயைக் கவனித்துக் கொள்ளச் செய்துவிட்டு நீ வெளியே உன் வேலைகளைப் பார்க்கச் செல்லலாம்! நான் சொல்லுகிறபடி மட்டும் நீ செய்யாவிட்டால், பிறகு நீ வியாதி என்று வரும்போது உன்னை ஒரு நாயைப்போலக் கஷ்டப்பட்டுச் சாகவிடுவேன். ஞாபகமிருக்கட்டும்!..." என்று டாக்டர் தன் ஆத்திரத்தைக் கொட்டினார்.

ஹொனோரின் மனக்கடல் கொந்தளித்தது. நினைவுகள் பல விதமாகத் தோன்றி அவனைச் சித்திரவதை செய்தன. டாக்டரின் வார்த்தைகள் அவனைப்

பயமுறுத்திவிட்டன. என்று லும் யோசித்தான். அவனோ பணத்தின் மீது கண்ணுயிருப்பவன். நர்ஸை அமர்த்திக் கொள்ள எவ்வளவு பணம் செலவாகுமோ...ஏதேதோ கணக்குகள் போட்டுப் பார்த்தான்.

"அந்த நர்ஸ் இதற்காக எவ்வளவு பணம் கேட்பாள்?" என்று டாக்டரிடம் தயங்கிக் கொண்டே கேட்டான்.

"அது எனக்கெப்படித் தெரியும்? நீ எவ்வளவு நாட்களுக்கு அவளை அமர்த்திக் கொள்ள வேண்டியிருக்கிறதோ அதைப் பொறுத்தது பண விஷயம். அதைப்பற்றி நீயே அவளிடம் போய்ப் பேரம் பேசிக்கொள். ஆனால் இன்னும் சிறிது நேரத்திற்கெல்லாம் அந்த நர்ஸ் இங்கு வந்தாகவேண்டும்!"

"சரி, டாக்டர்! நான் இப்பொழுதே அந்த நர்ஸிடம் போய் ஒழுங்கு செய்துகொள்கிறேன்!" என்று சொல்லிவிட்டுப் புறப்படத் தயாரானன் ஹொனோர். டாக்டர் விடை பெற்றுக் கொண்டார்.

அந்த நர்ஸ் –'மதர்ரேப்பெட்' என்று அவளை அக்கிராமத்தார் அழைப்பார்கள்.– சலவைத் தொழிலை மேற்கொண்டிருந்தாள். அதோடு அந்தக் கிராமத்துக் கிறிஸ்தவர்கள் யாராவது இறக்கும் தறுவாயில் இருந்தால் அவர்களுக்கு ஒத்தாசை செய்வது, பிணங்களைப் பாதுகாப்பது போன்ற வேலைகளையும் அவள் பார்த்துக் கொள்வது வழக்கம். மனிதர்களிடம் மிகவும் மலிவாகக் காணக்கூடிய வஞ்சகம், பொறாமை, பேராசை, வெளிவேஷம் போன்ற பண்புகள் அவளிடமும் இல்லாமலில்லை.

ஹொனோர் அவள் வீட்டினுள் நுழைந்த பொழுது அவள் துணிகளைத் துவைப்பதற்காக ஒரு தொட்டியில் நீலத்தைக் கலக்கிக் கொண்டிருந்தாள். உபசாரத்திற்காகத் தன் வணக்கத்தைத் தெரிவித்துக் கொண்டான் ஹொனோர்.

"என்னப்பா விசேஷம், நீ சௌக்கியந்தானே?" என்று அந்தக் கிழவி அவனை வரவேற்றாள்.

"நான் நல்ல சுகத்துடன் தானிருக்கிறேன். ஆனால் என் தாயாருக்குத்தான் உடம்பு ஒரு மாதிரியாக........."

"உன் தாயாருக்கா? அவள் உடம்பிற்கு என்ன?"

"அவளுக்கு இந்த உலகம் புளித்துப் போய்விட்டது. சீக்கிரம் செத்துப் போய் விடுவாள் போலத் தெரிகிறது."

அந்தக் கிழவி தொட்டியிலிருந்து தன் கைகளை வெளியே எடுத்தாள்; நீலநிறத் தண்ணீர்த் துளிகள் அவள் கைகளிலிருந்து விரல்களின் வழியாக வழிந்து தண்ணீர்த் தொட்டியில் விழுந்தன. மிகுந்த வியப்போடு அவள் கேட்டாள். அவள் குரலில் அனுதாபம் குமிழ் விட்டது.

" அவ்வளவு மோசமான நிலை யிலா அவள் இருக்கிறாள் ?"

" அவள் பிழைக்க மாட்டா ளென்று டாக்டரே சொல்லி விட்டார்...?"

ஹொரனோர் தாமதித்தான். தன் பேரத்திற்குப் பீடிகை போடத் தீர்மானித்தான். கிழவியே அதை ஆரம் பித்து வைப்பாளென்று எதிர் பார்த்தது வீணாகிவிடவே அவனே விஷயத்திற்கு வந்து விட்டான்.

"ரேப்பட், நான் வந்த விஷயத் தைச் சொல்லி விடுகிறேன். அவள் இறக்கும் வரை அவளை நீ கவனித்துக்கொள்ள வேண் டும். என் நிலைமையும் உனக்கு நன்றாகத்தெரியும். என்னால் அதி கப்பணம் தரமுடியாது. தாய்க் குச் செய்தாக வேண்டிய ஒரு கடமையாக இது எனக்கு அமை வதால் நான செய்ய வேண்டி யிருக்கிறது...நீ எவ்வளவு கேட் கிறாய்?"

" நான் இரண்டு விதமான 'பீஸ்' வாங்கி வருகிறேன். பணக்காரர்களிடம் பகற்பொழு திற்கு இரண்டு பிராங்குகளும் இராப் பொழுதிற்கு மூன்று பிராங்குகளும் பெறுகிறேன். ஏழைகளிடம், பகற்பொழுதிற்கு ஒரு பிராங்கும் இராப் பொழு திற்கு இரண்டு பிராங்குகளும் பெறுகிறேன். மதர் ரேப்பட் கச் சிதமாகத் தன் பேரத்தை முடித் துக்கொண்டாள். ஹொரனோர்

அதைப் பற்றிச் சிந்திக்க ஆரம்பித்தான். அவனுக்குத் தன் தாயாரின் உடல் நிலையும், அவளிடம் எஞ்சியுள்ள சக்தி எவ்வளவென்பதும் நன்ருகத் தெரியும். டாக்டர் என்ன தான் சொன்னுலும் அவள் இன்னும் ஒரு வாரத்திற்காவது உயிருடனிருப்பாளென்றே அவன் எண்ணினன்.

"சரி, அவள் உயிரோடிருக்கும் வரையில் அவளைக் கவனித்துக்கொள்ள நீ ஒரு தொகையைக் கேள். இது ஒரு சிக்கலான விஷயம். டாக்டர் சொல்கிருர், அவள் இறந்துவிடுவாள் என்று. அப்படியே நேர்ந்துவிட்டால் உனக்குத்தானே லாபம்? — ஒரு பகற்பொழுது மட்டும் வேலைசெய்து முழுத் தொகையையும் பெறலாமல்லவா? என்ன சொல்லுகிருய்?"

மதர் ரேப்பெட் அவன் முகத்தைத் திகைப்போடு பார்த்தாள். இத்தகைய ஒப்பந்தத்தோடு எந்த மரணப் படுக்கையையும் அவள் அண்டியது கிடையாது! இது ஒரு எக்கச்சக்கமான ஒப்பந்தமாக இருந்ததால் அவள் அதைப்பற்றி யோசிக்க ஆரம்பித்தாள். அவள் மனத்திலே ஒரு சந்தேகம் தோன்றியது.

"நான் உன் தாயாரை நேரில் பார்க்காமல் எதுவும் சொல்ல முடியாது" என்ருள் முடிவாக.

"சரி, அப்படியானல் அவளை வந்து பார்!" என்று கூறினன் ஹொனேர். அவள் தன் கைகளைக் கழுவித் துடைத்துக்கொண்டு அவனைத் தொடர்ந்தாள். வழியில் அவர்களுக்கிடையே எந்த விதமான பேச்சு வார்த்தையும் நடைபெறவில்லை. அவர்கள் அந்தச் சிறுவீட்டை நெருங்கிக் கொண்டிருந்தபொழுது, "ஒரு வேளை இப்பொழுதே என தாயார் இறந்துவிட்டு இருந்தால்..." என்று முனகிக்கொண்டான் ஹொனேர். அவன் அதை அதிகமாக எதிர்பார்ப்பதைப் போல ஒலித்தது அவன் குரல்!

ஆனல், அவன் தாய் அப்பொழுது பிணமாகி இருக்கவில்லை. அவள் தன் படுக்கையில் அசைவின்றி அமைதியாகப் படுத்துக் கொண்டிருந்தாள்.

மதர் ரேப்பெட் செத்துக் கொண்டிருந்த அந்தக் கிழவியை நெருங்கி, அவளைப் பார்த்துப் புன்முறுவல் பூத்து அவள் நாடித் துடிப்பையும் இருதயத் துடிப்பையும் சோதனையிட்டாள். பின் அவளிடம் சில கேள்விகளைக் கேட்டாள். நோயாளியின் குரலிலிருந்தே இன்னும் எத்தனை நாளைக்கு உயிர் இருக்கும் என்பதை அறிந்துகொண்டு விடுவாள் ராப்பெட். கிழவியை வெகு நேரமாகச் சோதனைசெய்து பார்த்து விட்டபிறகு வெளியே வந்தாள். ஹொனேர் அவளைத் தொடர்ந்தான். அன்றிரவு வரைதான் அந்தக் கிழவி உயிருடன் இருப்பாள் என்று நிச்சயம் செய்து கொண்டாள் மதர் ரேப்பெட்.

"என்ன மதர் ரேப்பெட்?"

"உன் தாய் இன்னும் இரண்டு நாட்களுக்கு — ஏன் ஒருவேளை

மூன்று நாட்களுக்குக் கூட உயி ருடனிருப்பாள் போல் தோன்று கிறது. ஆகையால் எனக்கு ஆறு பிராங்குகள் வேண்டும்.''

'ஆறு பிராங்குகள்! ஆறு பிராங்குகள்!... மதர் ரேப்பெட், நீ விளையாடவில்லையே?... நான் சொல்லுவதைக் கேள்!... அவள் இன்னும் ஐந்து அல்லது ஆறு மணி நேரம்தான் உயிருடன் இருக்கப் போகிறாள்!...''

இருவருக்குமிடையே பேரம் வெகுநேரம் நடந்தது. மதர் ரேப்பெட் தனக்கு ஆறு பிராங்கு கள் தராவிட்டால் தான் அந்த வேலையை ஏற்றுச்செய்ய தயாரா யில்லை யென்று கண்டிப்பாகக் கூறிவிட்டுப் புறப்படத் தயா ரானாள். ஹொனேருக்கு என்ன செய்வதென்று தோன்றவில்லை. பணம் அதிகமாகச் செல வாகிறதே என்ற கவலை! அதே சமயத்தில் அந்த டாக்டரின் பயமுறுத்தல் வேறு! நேரம் கழிவதையும் ரேப்பெட் 'பிகு' பண்ணுவதையும், கோதுமைத் தானியங்கள் தாமாகவே வீட் டிற்குள் வந்துவிட முடியா தென்பதையும் நன்ருக உணர்ந்த ஹொனேர், கஷ்டத்தோடு மதர் ரேப்பெட்டிற்கு ஆறு பிராங்கு கள் தருவதாக ஒப்புக்கொண் டான்.

பிறகு அவன் வயலுக்குச் சென்ருன். மதர் ரேப்பெட் அந்தக் கிழவி படுத்துக்கொண் டிருந்த அறைக்குள் நுழைந் தாள்.

"நீ கடைசியாக நம் போதக ரிடம் பாவமன்னிப்பு அறிக்கை செய்துவிட்டாயா, அம்மா...?'' என்று பரிவோடு கேட்டாள்.

கிழவி, "இல்லை'' என்று கூறும் வகையில் தலையை யசைத் தாள்.

உடனே மதர் ரேப்பெட் போதகரின் வீட்டிற்கு விழுந் தடித்துக் கொண்டு ஓடினாள். போதகரும் உடனே புறப்பட் டார். அவருக்கு முன்பாக ஒரு சிறு பையன் மணியடித்துக் கொண்டே ஓடினான்! போதகர் அவ்வழியே செல்கின்றார் என் பதை இப்படி அறிவிப்பதுண்டு. அப்பொழுது வெய்யில் கொளுத் திக் கொண்டிருந்தது. வயலில் வேலை செய்து கொண்டிருந்தவர் கள் தங்கள் அகன்ற தொப்பி களை உயர்த்திப் போதகருக்கு மரியாதை செலுத்தினார்கள். பெண்கள் தங்கள் நெற்றியில் 'சிலுவை' போட்டுக்கொண்டார் கள். மணியோசையைக் கேட்ட சில கோழிகள் அஞ்சி வீதியி லிருந்து குழிகளுக்குப் பறந்து சென்று மறைந்தன. புல் மேய்ந்து கொண்டிருந்த ஒரு சிறுகுதிரையும் பயந்து தன் கால்களைப் பலமாக உதைத்துக் கொண்டது. நீண்ட சிவப்பு அங்கியொன்றை அணிந்திருந்த அந்தப் பையன் வேகமாக ஓடிக் கொண்டிருந்தான். தரையைப் பார்த்தபடியே ஏதோ ஜெபங் களை முணுமுணுத்துக்கொண்டு அவன் பின்னே சென்று கொண் டிருந்தார் போதகர். அவர் சதுரமானதோர் தொப்பியையும் வெள்ளை அங்கியையும் அணிந் திருந்தார். அவர்கள் பின்னே

மதர் ரேப்பெட் அமைதியாகக் குனிந்த தலை நிமிராமல் சென்று கொண்டிருந்தாள்.

தூரத்தில் வயல் வேலைகளிலீடுபட்டிருந்த ஹொனோர், அவர்கள் செல்வதைப் பார்த்துவிட்டு "நம் போதகர் எங்கு செல்கிறார்?" என்று தன் வேலைக்காரனிடம் கேட்டான்.

"உங்கள் தாயார் இராப் போசனமும், பாவ மன்னிப்புப் பெற அறிக்கையும் செய்ய வேண்டுமல்லவா? அதற்காகத் தான் செல்கிறார்!" என்றான், தன் எசமானனை விடச் சற்றுப் புத்திக்கூர்மை வாய்ந்த அந்த வேலைக்காரன்.

எந்த விதமான ஆச்சரியக் குறிகளும் துயரக் குறிகளும் ஹொனோரின் முகத்தில் தோன்றவில்லை. 'மேரியோ' என்று தன் வேலையில் மூழ்கினான்.

செத்துக் கொண்டிருந்த கிழவி தன் பாவங்களையெல்லாம் இறுதியாக அறிக்கையிட்டுப் பாதிரியாரிடம் மன்னிப்பைப் பெற்றாள்! இரு கிழவிகளையும் அங்கு விட்டுவிட்டுப் பாதிரியார் சென்று விட்டார். மதர் ரேப்பெட் பொறுமையை வரவழைத்துக் கொண்டு, செத்துக் கொண்டிருந்த கிழவிக்குக் காவலாக இருந்தாள். அந்தக் கிழவி சாக இன்னும் எவ்வளவு நேரம் செல்லப் போகிறதோ என்று எண்ணியபடியே அவளைப் பார்த்துக் கொண்டிருந்தாள்.

பொழுது சாய்ந்து கொண்டிருந்தது. குளிர்ந்த காற்று வீசிக்கொண்டிருந்தது. சன்னல்களின் 'படுதா'த் துணிகள் அச்சன்னல்களின் பிடிப்புகளிலிருந்து பறந்து செல்லத் துடிப்பதைப்போல் சிறகடித்தன! அந்தக் காட்சி கிழவியின் உயிர் அவள் உடற் பிடிப்பிலிருந்து விடுபடத் துடித்துக் கொண்டிருந்ததைப் போலத் தோற்றமளித்தது.

கிழவி தன் விழிகளை உருட்டிக் கொண்டு அசைவின்றிப் படுத்துக் கொண்டிருந்தாள், சாவதானமாகத் தன்னை நெருங்கிக் கொண்டிருந்த மரணத்தை வரவேற்கும் வகையில். அவள் தொண்டை வறண்டு போயிருந்தது. சிரமத்தோடு மூச்சு விட்டுக் கொண்டிருந்தாள். சீக்கிரமே அதுவும் முடிந்துவிடும்.

ஹொனோர் அப்பொழுது அங்கு வந்தான். கிழவியின் படுக்கையை யடைந்த அவன் தன் தாய் இன்னும் உயிரோடிருப்பதைக் கண்டதும் மதர் ரேப்பெட்டிடம் அவளைப் பற்றி விசாரித்தான். அவளை அடுத்த நாள் காலை ஐந்து மணிக்கு வருமாறு கூறி அனுப்பி விட்டான். அங்ஙனமே அடுத்த நாட் காலை ஐந்து மணிக்கெல்லாம் அந்தக் கிழ நர்ஸ் அங்கு வந்து சேர்ந்தாள்.

"உன் தாயார் இன்னும் இறக்கவில்லையா?" என்று வரும்பொழுதே மதர் ரேப்பெட் கேட்டாள்.

"இல்லை. இப்பொழுது அவளுக்குக் கொஞ்சம் தேவலை" என்று கூறிவிட்டு அவன் தன்

வேலைகளைக் கவனிக்கச் சென்று விட்டான்.

மதர்ரேப்பெட் சோர்வு அடைந்து, செத்துக் கொண்டிருந்த அந்தக் கிழவியின் படுக்கையை நெருங்கினாள். அவள் எவ்வித மாறுதலுமின்றி, முந்தின நாள் போலவே இருந்த நிலையைக் கண்ட மதர் ரேப்பெட் இன்னும் இரண்டு மூன்று நாட்களுக்கு—ஏன்—ஒரு வாரத்திற்குக் கூடத் தனக்கு அங்கு நர்ஸ் வேலை செய்ய வேண்டிய நிர்ப்பந்தம் ஏற்படுமோ என்று எண்ணினாள். பேராசை கொண்ட அவள் மனம் கொந்தளித்தது. தன்னை ஏமாற்றிய ஹொனோரின் மீதும், சீக்கிரமாகச் சாகாமலிருக்கும் கிழவியின் மீதும் அவளுக்குக் கோபம் கோபமாக வந்தது. தன் நர்ஸ் வேலையைச் செய்து கொண்டே படுத்துக் கொண்டிருந்த கிழவியின் நிலையைக் கவனித்துக் கொண்டிருந்தாள்.

வயல் வெளியில் தன் வேலைகளை முடித்துவிட்டு ஹொனோர் சாப்பாட்டிற்காக வீட்டிற்கு வந்தான். அப்பொழுது மணி பனிரண்டு. வெய்யோன் உச்சிக்கு நேராகக் காய்ந்து கொண்டிருந்தான். ஹொனோரின் முகத்தில் திருப்திக்குறிகள் தோன்றின. சாப்பிட்டு விட்டு அவன் தன் வேலைகளைக் கவனிக்கச் சென்றான்.

மதர் ரேப்பெட்டிற்கு வேதனை தாங்க முடியவில்லை. அவளுக்கு ஒரு எண்ணம்—பைத்தியக்காரத்தனமானதோர் எண்ணம்—எழுந்தது. சோர்ந்து படுத்துக்கொண்டிருந்த கிழவியின் தொண்டையை நெறித்துக் கொன்று விட எண்ணினாள்!... அது சற்று ஆபத்தான, அபாயகரமானதோர் செயலாகத் தோன்றினதால் வேறு திட்டங்கள் தீட்டுவதில் ஈடுபட்டாள். சிறிது நேரம் கழிந்தது.

"நீ இன்னும் பேயைப் பார்க்கவில்லையா?" செத்துக் கொண்டிருந்த ஜீவனிடம் மதர் ரேப்பெட் கேட்டாள்.

"இல்லையே!" என்றாள் கிழவி.

மதர்ரேப்பெட் அந்தக் கிழவிக்குப் பிசாசுகளைப் பற்றிய கதைகளைக் கூறி அவளைப் பயப்படச் செய்தாள். செத்துக் கொண்டு இருப்பவர்களுக்குப் பிசாசு அவர்கள் இறப்பதற்குச் சில நிமிட நேரத்திற்கு முன் தான் காணப்படும் என்று ஆரம்பித்து அந்தப் பிசாசின் உருவத்தை வர்ணித்துப் பிறகு, அந்தப் பிசாசைத் தங்கள் மரணப் படுக்கையில் கண்டவர்களின் பெயர்களையும் கூறத் தொடங்கினாள் மதர் ரேப்பெட். இவைகளை யெல்லாம் கேட்ட கிழவி மிரண்டு போனாள். நடுக்கம் அவள் உடலை உலுப்பியது!

மெதுவாக மதர் ரேப்பெட் அங்கிருந்து நழுவினாள்!—கிழவியின் கட்டிலுக்கு எதிரே இருந்த திரைக்குப்பின் சென்றாள். அங்கிருந்த ஒரு கறுப்புப் போர்வையைத் தன் உடலில் போர்த்திக்கொண்டு, கையில் ஒரு சட்டியைக் கவிழ்த்துக் கொண்டு, ஒரு

தமிழ்நாடு ஆவணக் காப்பக நூலகம்

கொண்டவளாகச் சற்று கோபத்துடன் தட்டை மேஜைமீது வைத்தாள் கௌசல்யா.

ராம்பிரசாத் தன் கையிலிருந்த மோதிரத்தை ஒளித்து வைக்கவில்லை. அதை மேஜை மீது பகிரங்கமாக வைத்தார். கௌசல்யா அதை ஆத்திரத்துடன் எடுத்துப் பார்த்தாள். அதில் சில நல்ல வைரங்கள் பதிக்கப்பட்டிருந்தன.

ஏழாவது தடவை ராம்பிரசாத் சிரித்தார். கௌசல்யாவுக்கு பயம் அதிகரித்தது. கணவனுக்குப் பைத்தியமோவென சந்தேகித்து, "இன்றைக்கு உங்களுக்கு என்றுமில்லாத சிரிப்பு வருகிறதே...என்ன 'காரணம்? இப்படி ஓய்வில்லாது சிரிப்பது சாதாரண மக்களுக்கு விரோதமான விதியல்லவா? என்ன, மௌனம் சாதிக்கிறீர்கள்? வேண்டுமென்றால் நமது டாக்டரை வரவழைக்கட்டுமா?" என்று சாந்தமாகக் கேட்டாள் கௌசல்யா.

ராம்பிரசாத் சட்டெனச் சிரிப்பை நிறுத்தினார்.

"கௌசல்யா, எனக்கு ஒரு வேளை பைத்தியமோ என்று நினைக்கிறாயா நீ? என் பழைய நினைவின் கதையை இன்று இம் மோதிரம் நினைப்பூட்டியது. அதை நினைத்தவுடன் சிரிப்பும் தானாகவே பீறிட்டுக் கிளம்புகிறது."

"என்ன, உங்களுடைய பழைய கதையா?" என்றாள் கௌசல்யா.

"ஆம்"

"ஆனால்..."

"ஆனால் என்ன..."

"நீங்கள்... உங்களுக்கு முதல் கல்யாணம் ஏதாவது நடந்ததா? இந்த மோதிரம்... காதற் பரிசாக யாராகிலும்..." என்று நாக்குழறக் கேட்டாள் அவள்.

ராம்பிரசாத் 'கொல்' லெனச் சிரித்ததைக்கேட்டுக் கௌசல்யா ஆறுதலுற்றாள்.

"அசடே, நான் கல்யாணம் பண்ணினதே உன்னைத்தான். இந்த மோதிரம் ஒரு மோசக்காரனுடையது. நான் அதைக் களவாடினேன்" என்று வெறுப்புடன் கூறினார் அவர்.

தன் கணவனின் கதையில் 'பெண்' யாரும் சம்பந்தப்படவில்லை என்ற ஆறுதல் கௌசல்யாவுக்கு மனதைக் குளிரவைத்தது.

"நீங்கள் மோதிரத்தைத் திருடினீர்களா?"

"ஏன், நம்ப முடியவில்லையா? அது ஒரு நீண்ட கதை...... கௌசல்யா, இது கட்டுக் கதையா அல்லது என் கதையா வெனச் சந்தேகிப்பாய். ஆனால் ஒவ்வொரு வார்த்தையும் உண்மை. நான் உன்னைக் கல்யாணம் பண்ணும்போது எனக்கு வயது முப்பது இருக்கும். பெற்றோருக்கு நான் கடைக்குட்டி. சிறு வயதிலேயே படித்து மேலுக்கு வர ஆசை கொண்டேன். ஆனால் என் தந்தையோ எளிய சேவகர். வறுமையின் தாண்டவத்தில்

என் ஆசைகள் எப்படி நிறைவேற முடியும்?

ஒருதினம், அடுத்த கிராமத்துக்குப் போய்க்கொண்டிருந்தேன். கையில் ஒரு கோணியும், சட்டைப் பையில் சொற்பக் காசுகளும் இருந்தன. நான் போகும் வழியில் ஒரு பெரிய அணைக்கட்டு வேலை நடந்துகொண்டிருந்தது. திடீரென்று யாரோ ஒரு சர்க்கார் பணியாள் என்னை வழிமறித்து, அவனோடு கூடப் போகும்படி கட்டாயப் படுத்தினன். ஒன்றன் பின் ஒன்ருக நாலைந்து பேர்கள் கூடி என்னை இழுத்துச் சென்றனர்.

இந்த வைரமோதிரம் அணிந்த கண்டிராக்டர்தான் என்னை அடித்துத் துன்புறுத்தினன். அவர்கள் சமீபத்தில் நடந்துகொண்டிருந்த அணைக்கட்டை மேற்பார்வையிட்ட சிப்பந்திகளென ஊகித்துக்கொண்டேன். அந்தக் காலத்தில் உலவிய வதந்திகளை நான் அறிவேன். அணைக்கட்டு அடிக்கடி உடைந்து விழுவதால் மனித பலி கொடுக்க ஆள் தேடுவதாகவும், எத்

தனையோ உயிர்களைப் பலிகொடுத்தாகிவிட்டதெனவும் பலர் சொல்லிவந்த கதைகள் ஞாபகத்துக்கு வரவே ஒருவித முடிவுக்கு வந்தேன். அவர்களிடமிருந்து தப்ப எனக்கு வழியேயில்லை. அதனால் பைத்தியக்காரனைப்போலச் சிரிக்க ஆரம்பித்தேன். அன்றுதொட்டுத்தொடங்கிய சிரிப்புத்தான் இன்னும் தொடர்ந்து வருகிறது.

"என்னைப் பலர் பல கேள்விகள் கேட்டுப் பார்த்தனர். நான் செவிட்டு ஊமையனைப் போலப் பாசாங்கு பண்ணிக்கொண்டு சிரித்துக்கொண்டே அவர்களுடன் சென்றேன். நிச்சயமாக என்னைப் பலி கொடுக்கத்தான் போகிறார்கள் என்பதை உணர்ந்தேன்.

"நான் அவர்களுடன் எட்டு நாட்கள் எப்படியோ கழித்துவிட்டேன். எனக்கு வயிறாரத் தின்பண்டங்கள் தந்தார்கள்.

"அன்று மறுதினம் என்னைப் பலி கொடுப்பதாக ஆலோசனை. அன்றிரவு வெகுநேரம்விழித்து, தப்பும் வழிபற்றி மண்டையை உடைத்துக் கொண்டேன். ஒன்றும் தோன்றவில்லை. என் கிழட்டுத் தாயை நினைத்து வெகு நேரம் அழுதேன்.

'கடைசியில்' ஒருவிதமுடிவுக்கு வந்தேன். அன்று சாயங்காலம் ஐந்து மணிக்கு என் இறுதிக் காலம் என்பது அவர்கள் திட்டம். மத்தியானம் சாப்பிட்டு முடிந்தவுடன் வழக்கம்போல அணைக்கட்டு கண்டிராக்டர் ரெட்டியாரிடம் சிரித்துக்கொண்டோடினேன். அவன் கையிலிருந்த வைர மோதிரத்தைக் கழற்றி என் கையில் போட்டுக்கொண்டேன். தற்சமயம் அவர்கட்கு நான் அதிக தேவையாக இருப்பதால் என் கூத்துக்கு அவர்கள் ஆடவேண்டியதுதானே...?நான் சிரித்தேன்; மோதிரத்தை அழகு பார்த்து ஆடினேன். பிறகு சப்தமிட்டவண்ணம் சற்று ஓடிவிட்டுத் திரும்பினேன். இப்படிப் பத்துப் பன்னிரண்டு முறை ஓடியபின் என்னை ஒருவரும் சட்டை பண்ணவில்லை. என்மீது அவர்களுக்கு அவ்வளவு நாட்டமிருந்ததாகக்கூடத் தெரியவில்லை. என்னை அவர்கள் முழுவதும் நம்பியிருக்க வேண்டும். இதை நான் உணர்ந்துகொண்டேன்; கடைசியாகச் சமயம் பார்த்து ஓடினவன் ஓரே ஓட்டமாக ஓடி மறைந்தொளிந்து பாதை சேர்ந்து, காட்டு வழியே உயிர் தப்பினேன்.

"மோதிரத்தைக் கழற்றி மடியில் வைத்துக்கொண்டேன். வழியிலொரு வைக்கோல்வண்டி போய்க்கொண்டிருந்தது. அதில் ஏறி வைக்கோலுக்குள் மறைந்து மூச்சுவிடவும் முடியாது திணறிகொண்டு இரவில் இறங்கிக் காட்டில் ஒளிந்துகொண்டேன்.

"மூன்று நாட்கள் ஒதுங்கிப் பதுங்கி ஓடினதன் பயனாக பம்பாய்க் கருகிலுள்ள ஒரு கிராமத்தை யடைந்தேன்.

"மோதிரத்தை மெல்ல எடுத்துக் கல்லிருந்த பாகத்தை நீக்கி,

அதிசயம்

ஆர்தர் வேபன் என்பவர் தனது குளிக்கும் அறையை விட்டுக் கிளம்புகையில், கீழே கிடந்த சோப்புக் கட்டியின் மீது கால் படவே அது சறுக்கிவிட்டு எதிரே இருந்த ஜன்னலின் மீது மோதி, அங்கிருந்து தவறி, ஐம்பத்தொன்பதாவது மாடியிலிருந்து கீழே தரையில் விழுந்து அகால மரணமடைந்தார் என்று வந்த செய்தி உண்மையில்லை. பொய்.

இங்ஙனம்
ஆர்தர் வேபன்.

மற்ற பாகத்திலுள்ள தங்கத்தைக் கூரிய கல்லொன்றினால் உடைத்து எடுத்து விற்றேன். உடனே பம்பாய்க்கு டிக்கட் வாங்கினேன். சிறு கடை வைத்தேன் கைப்பொருள் உதவியால். பின்— அதாவது பன்னிரண்டு ஆண்டுகளுக்குள் பெரிய வியாபாரியாகிவிட்டேன். அச்சமயமே உன்னை எனக்குக் கல்யாணம் செய்து தந்தார் உன் தந்தை...” என்று கூறிக் குறும்புடன் சிரித்தார் ராம்பிரசாத்.

கௌசல்யா தன் கணவரது விநோதக் கதையைக் கேட்டு ஆச்சரியமுற்றாள்.

“ஆமாம், நீங்கள் ஓடிப்போய் விட்டதை அந்தக் கண்டிராக்டர் முதலியோர் கண்டுபிடிக்க வில்லையா? வைர மோதிரத்தை இழந்ததும் அவன் அதிகம் கோபமுற்றிருப்பானே...”

“சந்தேகமில்லாமல் கோபமடைந்திருப்பான். தேடிப் பார்த்துமிருப்பான். ஆனால்நான் தெய்வாதீனமாகத் தப்பிக் கொண்டுவிட்டேன்...”

“இன்னும் அந்த வைர மோதிரத்தை நீங்கள் விற்காமல் வைத்திருக்கிறீர்களே...”

“பணம் சேர்ந்ததும் முதல் வேலையாக வைர மோதிரத்தை முன்போலக் கட்டினேன். ஒரு முறை அடகு வைத்து மீட்டுக் கொண்டேன். எப்படியாவது ஒருநாள் அவரைக் கண்டுபிடித்து அதை அவரிடம் ஒப்புவித்துவிடவேண்டுமென்ற ஆசை இருந்துகொண்டிருக்கிறது. ஆனால் சில தடைகள் குறுக்கிட்டு என் மனோதிடத்தைச் சிதைத்துவிட்டன. பதினாறு ஆண்டுகள் அப்படியும் இப்படியுமாகக் கழிந்தன. இன்று மனதைத் திடப்படுத்திக் கொண்டேன். மோதிரம் சொந்தக்காரரிடம் சேரவேண்டியதே...”

“அப்படியானால் ஆசாமியைக் கண்டு பிடித்துவிட்டீர்களா? அவர் யார்? உங்களை அவர் கண்டுகொண்டாரா?”

அகன்ற கண்களை ஆவல் பொங்க விழித்து நோக்கியவண்ணம் கேள்விகளை அடுக்கினாள் கௌசல்யா.

“கௌசல்யா, அந்த ஆளைப் பதினேழு ஆண்டுகளுக்கு முன்னரே கண்டுபிடித்துவிட்டேன். ஆனால்......”

“அவர் எங்கிருக்கிறார், சொல்லுங்கள். அவருடைய தீச்செயலுக்குப் படிப்பினை கற்பிக்கிறேன்—” என்று ஆத்திரத்துடன் கேட்டாள் அவள்.

“அவர்தான் உன் அப்பா” என்றுகூறிய ராம்பிரசாத், நீண்ட பெருமூச்சுடன் இருக்கையை விட்டு எழுந்து சென்றார்!

தமிழ்நாடு ... நூலகம்

விற்பனையாகிறது
வாங்கிவிட்டீர்களா?

★

ஜெகசிற்பியன் எழுதிய

காதலன் தேவை

ஆத்மாவின் எஞ்சினீயர் போன்ற ஒரு எழுத்தாளனுக்கு அந்தரங்கக் காதலியாக வந்து சேருகிருள் ஒரு அப்பட்டமான வேசி.

நாகரிகம் எனும் கருப்பு மெழுகை வாரி, கண்களில் அப்பிக் கொண்ட ஒரு கன்னி கடற்கரையிலே தன் கற்பை உணர்ச்சிக்குப் பணயம் வைத்து விடுகிருள்.

இப்படி ஓடுகிறது இந்த அற்புத நாவலின் கதைக் கருத்து.

விலை அணு 12

0–13–0 ஸ்டாம்பு அனுப்பினுல் சாதாத் தபாலில் அனுப்பப்படும்.

★

15–10–51ல் வெளிவருகிறது

'பாலனி'ன்

விதவையின் காதல்

விலை அணு 8.

கைவசமுள்ளவை :–

அன்புத் தீ ஜெகசிற்பியன்	0–12–0
இதய ஓசை ஜெகசிற்பியன்	0–8–0
முழுமதி வேலை வில்லாளன்	0–8–0
காதல் பைத்தியங்கள் பாலன்	0–8–0

விபரங்களுக்கு :

வைகறை வெளியீடு

திருப்பாதிரிப்புலியூர்.

விரைவில் வருகிறது !

காதலி

ஸ்ரீமதி 'லலிதா' எழுதிய

உள்ளமுருக்கும் அற்புத நாவல்

மூவர்ண அட்டை

விலை 8 அணு

★

மூன்று இரவுகள்

'ஜெகசிற்பியன்' எழுதிய

காதல் நாவல்

மூவர்ண அட்டை

விலை 8 அணு

★

ஏஜெண்டுகளுக்கு 25% கமிஷன்

வி. பி. யில்

பெற்றுக்கொள்ளலாம்.

★

வெண்ணிலா வெளியீடு,

118, பிராட்வே—சென்னை-1.

1st Prize winners of C. No. 58. (1) Ganesh Singh, Hyderabad Dn (2) P. G. Pillai, Nagapattinam (3) J. S. Rao, Hyderabad Dn (4) S. Keethana, Orissa. (5) M. S. Ramulu, Bezwada. (6) B. M. Khasion, Bellary. (7) G. N. Rao, Peddapuram. (8) F. C. Ray, Sambalpur. (9) C. R. Swamy, Coimbatore (10) S. S. Jaiswal, Bilaspur & (11) K. S. Kamath, Kanhangad In addition one 2nd prize 11 3rd Prizes and 5 persons the 5th Prize.

Full particulars are published in the Rainbow dated 25—9—51

ரிஜிஸ்டர் நெ. 249

ரூ. 25,000 பரிசு

போட்டி நெ. 60

M/S Premier Bank of India Ltd-ல் சீல் செய்துவைக்கப் பட்டுள்ள சரியான விடை அவர்கள் அங்கீகாரத்தின்பேரில் பிரசுரிக்கப்படும். முற்றிலும் சரியான விடை அனுப்புபவர்களுக்கு முதல் பரிசு ரூ. 12,000. முதல் இரண்டு வரிசை சரியான விடைக்கு இரண்டாம் பரிசு ரூ. 7000. முதல் ஒரு வரிசை சரியான விடைக்கு மூன்றும் பரிசு ரூ. 3000. முதல் மூன்று நம்பர் சரியான விடைக்கு நான்காம் பரிசு ரூ. 2000 முதல் இரண்டு நம்பர்கள் சரியான விடைக்கு 5-ம் பரிசு ரூ. 1000 அளிக்கப்படும். எங்கள் ஸீல் வைத்த விடைகள்படி எல்லாம் சரியாக இருக்க வேண்டும்.

RAINBOW COMPETITIONS

KEY S. NO. 58 * 80 TO 95 = 350

92	81	82	95
91	86	85	88
87	90	89	84
80	93	94	83

We hereby certify that the above is the solution in original deposited with us by Rainbow Competitions No. 58 on 22.8.51 in a sealed cover which was opened in our presence to-day and that a copy of the above solution has been lodged with the Bank.

For The Premier Bank of India Ltd.

V. Ramaswamy 16.9.51
Agent, Madras

முடிவு தேதி 13-10-51 விடை 27-10-51

பிரவேசக் கட்டணம் : கூபன் 1-க்கு ரூ. 1-0-0 6 கூபன் கொண்ட ஸெட் 1-க்கு ரூ. 5-0-0

358

விடைகள் கண்டுபிடிக்கும் விதம்:— 82 முதல் 97 வரையுள்ள எண்களைக் கொடுக்கப்பட்டிருக்கும் கட்டங்களில், மேலிருந்து கீழும், இடமிருந்து வலமும், குறுக்காகவும் எப்படிக் கூட்டினாலும் 358 வரும்படியாக அமைக்க வேண்டும். ஒரு எண்ணை ஒரே தடவைதான் உபயோகிக்க வேண்டும்.

விதிகள்:— தனி வெள்ளைக் காகிதத்தில் தேவையான கட்டத்துடன் எத்தனை கூப்பன்கள் வேண்டுமானாலும் எழுதி அனுப்பலாம். ஒவ்வொரு கூப்பனிலும் பெயர், விலாசம், எண்கள் எல்லாம் ஆங்கிலத்தில் விளக்கமாக எழுதப்பட வேண்டும். பிரவேசக் கட்டணத்தைக் கிராஸ் செய்த போஸ்டல் ஆர்டர் மூலமாகவோ அல்லது மணியார்டர் மூலமாகவோ அனுப்பலாம். மணியார்டர் செய்த ரசீதைக் கூபன்களுடன் சேர்த்து அனுப்ப வேண்டும். வசூலுக்குத் தகுந்தபடி, பரிசு பகிர்ந்து அளிக்கப்படும். போட்டி சம்பந்தமாக மானேஜர் தீர்ப்பே முடிவானது; சட்டபூர்வமாய்க் கட்டுப்படுவதுமாகும். போட்டி முடிவு RAINBOW மாதமிருமுறைப் பத்திரிகையில் பிரசுரிக்கப்படும் அல்லது 4 அணா ஸ்டாம்பு அனுப்பினால் விடை அனுப்பப்படும்.

கூபன்கள் அனுப்பவேண்டிய விலாசம் :—

THE RAINBOW COMPETITIONS No. 60

28 (14) Thandavaraya Gramani Street, Tondiarpet, MADRAS - 21

Edited, Printed and Published by MURUGU SUBRAMANIAN for PONNI Ltd., at PONNI ACHAKAM, 15, Seni Amman Koil Street, Tondiarpet, Madras—21.

சென்னை-600 008
19780